உலகைக் காட்டும் பலகணி

யுனெஸ்கோ

கூரியர்

மார்ச் 1970 ஆண்டுச் சந்தா ரூ. 10·50 தனிப்பிரதி ரூ. 1·00

33

28 APR 1970

பியர்சன் அறிக்கை

உலக வளர்ச்சிக்குரிய புதிய திட்ட முறை



கற்கால சைப்ரஸின் 'பெரும் பூனை

உலகக் கலைக் கருவூலங்கள்

41

இது சிங்கம் அல்லது சிறுத்தையின் தலையாக இருக்கலாம். 8000 ஆண்டுகளுக்கு முன் சைப்ரஸில் இக் கொடிய விலங்குகள் திரிந்த காலத்தில் இது கற்கால கலைஞன் ஒருவனால் தீக்கல்லில் செதுக்கப்பட்டது. 11 செ. மீ. (4 அங்.) நீளமுள்ள இது கிரோகிட்டியாவில் அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற புதிய கற்கால கிராமம் ஒன்றில் கண்டெடுக்கப் பெற்றது. இங்கு உழவரும், வேடருமே வாழ்ந்து வந்த போதிலும், அவர்களுள் சிற்பி களும், கிண்ணங்கள், தட்டுகள், கருவிகள், 'மாலைகள், தாயத்துகள் செய்வோரும் இருந்தனர்.

யுனெஸ்கோ கூரியர்

மார்ச் 1970

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினுல் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினுல் பதின்மூன்று பதிப்புகளாக வெளியிடப்படுகிறது.

ஆங்கிலம் — ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு — இத்தாலியன்
ஸ்பானிஷ் — ஹிந்தி
ரஷ்யன் — தமிழ்
ஜெர்மன் — ஹீப்ரு
அராபிக் — பெர்சியன்
அமெரிக்க ஐக்கிய நாடு

விற்பனை, விநியோக அலுவலகம்:
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.
ஆண்டுச் சந்தா ரூ. 10.50

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் **யுனெஸ்கோ கூரியரிலிருந்து** எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது **யுனெஸ்கோ கூரியர்** ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினுய்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர்:
ஸாண்டி காஃப்ளர்
உதவிப் பிரதம ஆசிரியர்:
ரெனி காலோஸ்
பிரதம ஆசிரியருக்கு உதவியாளர்:
லூஸியோ அட்டினெல்லி
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலப் பதிப்பு: ரொனுல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு: ஏ. சந்திரஹாஸன் (டில்லி)
ஹீப்ரு: அலெக்ஸாண்டர் பெலி (ஜெருசலம்)
பெர்சியப் பதிப்பு: ஃபெரெதூன் ஆர்தலன் (டெஹ்ரான்)
தமிழ்ப் பதிப்பு: தெ. பொ. மீனுட்சிசுந்தரன் (சென்னை)
தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணைவர்கள்:
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸ்தபா
ஆராய்ச்சி: ஒல்கா ரோடல்
அமைப்பு, சித்திரம்: ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

The UNESCO Courier

March, 1970 No. 32 - 33

பக்கம்

4 ‘வளர்ச்சியில் கூட்டாளிகள்’

(i) புதிய உலகத் திட்ட முறை

10 (ii) ‘இன்று செயலாற்றவில்லையெனில் நாளை கேடு விளைவது உறுதி’

—லெஸ்டர் பி. பியர்சன்

15 திட்டத்தின் சுருக்கம்

18 காற்றின் ஆற்றலை வேரினுல் வெல்லல்

20 வளர்ச்சிக் குறைவால் மாறிவரும் புதிய தோற்றம்

24 தேவையில்லாக் குழந்தைகள் இனி வேண்டாம்

28 வேலையின்மைப் பெருக்கம்

31 பசுமைப் புரட்சி

34 யுனெஸ்கோ செய்தியறை

2 உலகக் கலைக் கருவூலங்கள்

கற்கால சைப்ரஸின் ‘பெரும் பூனை’

Cover design by Rolf Ibach - Unesco



No. 11 - 1970 MC 69-1-251F

அட்டைப் படம்

கடந்த 20 ஆண்டுகளாக வரலாறு காணுத வகையிலும் அளவிலும் உலக நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் ஒன்ருக ஈடுபட்டு வருகின்றன. ஆயினும், பேருதவியும் வளர்ச்சியுறும் நாடுகளின் பெரு முயற்சியும் தொழில்வளமுற்ற நாடுகளுக்கும் பிற நாடுகளுக்குமுள்ள பிளவை இன்னும் நீக்க முடியவில்லை. இதை பியர்சன் அறிக்கை ஆய்ந்தது. ரால்ஃப் இபாக் வரைந்த அட்டைப்பட ஓவியம் இன்றைய தலையாய சிக்கலாகிய இவ்வுலகப் பிரச்னையின் பன்னுட்டுக் கூறுகளைக் குறிப்பிடுகிறது.

பியர்சன் அறிக்கை

இவ்விதழில் சிறப்பிடம் பெற்றுள்ள பியர்சன் அறிக்கை இன்றைய பொருளாதார வளர்ச்சிபற்றி விரிவாக ஆய்ந்துள்ளது. ''வளர்ச்சியில் கூட்டாளிகள்'' எனும் தலைப்புடைய இவ்வறிக்கை பன்னாட்டுக் கூட்டுறவை ஒரு புதிய அடிப்படையில் அமைக்கத் திட்டமிட்டு, உதவியளிக்கும், உதவி பெறும் நாடுகளின் பொறுப்புகளை விளக்குகிறது. அதன் செயல் திட்டம் மிகுந்த பயனளிக்கவல்லது. அஃது இன்றைய உதவி திட்டத்தை 20 ஆண்டுகளில் வளர்ச்சியுறும் நாடுகளின் தேவைகளுக்கேற்ற ஒரு புதிய உலகத் திட்டமாக மாற்றும்.

ஈராண்டுகளுக்கு முன் வளர்ச்சி உதவி திட்டத்தைப்பற்றி ஐயப்பாடு எழுந்தபோது உலக வங்கித் தலைவர் ஜார்ஜ் உட்ஸ் ''விசாரணை'' நடத்துமாறு கூறினார். அதன்படி ''தகுதியும் அனுபவமுள்ள பன்னாட்டுக் குழுவொன்று 20 ஆண்டு உதவி திட்டங்களின் விளைவுகளை ஆய்ந்து, அவற்றின் தவறுகளை விளக்கி, எதிர்காலத்தில் நல் விளைவுகளைத் தரும் திட்டங்களை எடுத்துரைக்கவேண்டும்'' எனக் கூறியது.

1968, ஆகஸ்டில் உலக வங்கித் தலைவரான ராபர்ட் எஸ். மக்நமாரா முன்னாள் கனடா பிரதமரும் நோபல் அமைதிப் பரிசு பெற்றவருமான லெஸ்டர் பி. பியர்சனை அத்தகைய ஆய்வுக் குழுவொன்றை அமைக்குமாறு கேட்டார். மூன்று மாதம் கழித்து பன்னாட்டு வளர்ச்சிக் குழுவின் முதல் கூட்டம் கனடாவில் மாண்ட் கேப்ரியலில் நடைபெற்றது.

லெஸ்டர் பியர்சன் அதன் தலைவராகவும் சர் எட்வர்டு பாய்ல் (பிரிட்டன்), ராபர்ட்டோ டி ஒலிவெய்ரா காம்பாஸ் (பிரேஸில்), சி. டக்லஸ் டில்லன் (அமெரிக்கா), வில்ஃபிரீட் கத் (மேற்கு ஜெர்மனி), சர் ஆர்தர் லூயிஸ் (ஜமெய்க்கா), ராபர்ட் மு. மார்ஜோலின் (பிரான்ஸ்), சாபுரோ ஒகிட்டா (ஜப்பான்) ஆகிய பன்னாட்டுப் புகழ் பெற்ற எழுவர் உறுப்பினராகவும் இருந்தனர். அக்குழு ஆழ்ந்த ஆய்வுகளையும், இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளில் கூட்டங்களையும் நடத்தியது. அவற்றில் 70 அரசாங்கங்கள் தமது கருத்துகளைத் தெரிவித்தன. குழு தனது ஆய்வுகளையும் பரிந்துரைகளையும் 400 பக்கமுள்ள அறிக்கையாக இப்போது வெளியிட்டுள்ளது (விலைபோன்ற விவரங்களுக்கு பின்புற அட்டையின் உட்புறம் பார்க்க).

லெஸ்டர் பியர்சன் வாஷிங்டனில் பல வாரங்களுக்கு முன் நிகழ்ந்த உலக வங்கி, பன்னாட்டுச் செலாவணி நிதிக் கூட்டத்தில் நிகழ்த்திய உரையைக் கீழே காணலாம். அதில் இந்த ஆய்வின் முக்கிய குறிப்புகளை அவர் சுருக்கமாகத் தருகின்றார். பியர்சன் அறிக்கையின் முடிவுகள், திட்டங்கள் ஆகியவற்றின் பகுதிகளையும் சுருக்கங்களையும் இவ்விதழில் பிற கட்டுரைகளில் காணலாம்.

உலக வளர்ச்சிக்குரிய புதிய திட்டமுறை

லெஸ்டர் பி. பியர்சன் - நோபல் அமைதிப் பரிசு, 1957

1963 முதல் 1968 வரை கனடாவின் பிரதமராக இருந்த லெஸ்டர்.பி பியர்சன் 1957இல் நோபல் அமைதிப் பரிசு பெற்றார். அரசியல், தூதாண்மை வல்லுநராகிய இவர் ஐ. நா. சாசனத்தைத் தீட்டிய சான்பிரான்சிஸ்கோ மாநாட்டின் (1945) அறிவுரையாளராக இருந்தார். போரினால் பாழ்பட்ட நாடுகளின் பொருளாதார நிலையை உயர்த்தி நாடிழந்தவருக்கு வாழ்வளித்த 'யு. என். ஆர். ஆர் ஏ.' அமைப்பையும், உணவு பயிர், தொழில் நிறுவனத்தையும் அமைக்கும் திட்டங்களில் ஈடுபட்டார். ஐ. நா. பொதுப் பேரவைக்குத் தொடர்ச்சியாகத் தூதுக் குழுக்களின் தலைவராகச் சென்றார். 1952-53இல் அதன் தலைவராக இருந்தார். முக்கிய பன்னாட்டு நிகழ்ச்சிகளில் பெரும் பங்கு பெற்றார். 1960இல் உலக நெருக்கடி பற்றிய அவையின் பன்னாட்டு நிருவாகத் தலைவராகப் பணியாற்றினார்.

உலக நாடுகள் வளர்ச்சி ஒரு கடினமான சிக்கல் நிறைந்த பிரச்னை. மனித வரலாற்றில் நெருக்கடி மிகுந்த ஒரு கட்டத்தில் அதை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஐயப்பாடுகளும் முரண்பாடுகளும் நிறைந்த காலம் இது. கடந்த பத்தாண்டுகள், குடியேற்ற நாட்டு ஆதிக்கம் அழிவதில் தொடங்கி, சந்திரனில் மனிதன் இறங்கி நடப்பதில் முடிந்திருக்கின்றன.

நாம் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றங்களெல்லாம் இனிமேல் நாம் கடக்க வேண்டிய நீண்ட, அபாயம் நிறைந்த பாதையையே காட்டுகின்றன. போர் இல்லாதிருப்பதால் அமைதி நிலவிவிடவில்லை. முழு அழிவின் மங்கலான தோற்றம்தான் கருக்கலாகத் தெரிகிறது. மனிதர் எல்லோருடைய உரிமைகளையும் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற ஆசையானது, அதற்கான வழி வகைகளைக் காணும்போது கருத்து முரண்பாடுகளைத் தான் அதிகமாகத் தோற்றுவித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, கோடிக் கணக்கானவர் இன்னும் இந்த அவசியமான வாழ்க்கை உரிமைகளை அனுபவியாதிருக்கின்றனர் என்ற உண்மையையும் நாம் அறியுமாறு செய்திருக்கிறது.

புயல் வேகத்தில் ஏற்பட்டு வரும் தொழில் நுணுக்க மாறுதல்கள் ஆமை வேகத்தில் நடக்கும் சமூக மாறுதலைப் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டுவதுடன் அதைச் சகிக்க



Photo © Roger Canessa, Toulon

பன்னாட்டு வளர்ச்சி பற்றிய உலக வங்கிக் குழுவின் 8 உறுப்பினர்கள். "வளர்ச்சியில் கூட்டாளிகள்" எனும் ஆழ்ந்த அறிக்கையைத் தீட்டிய லெஸ்டர் பியர்சன் இதன் தலைவர்.



லெஸ்டர் பியர்சன்
(கனடா)

சர் எட்வர்டு பாய்ல்
(பிரிட்டன்)

ஐயம், வெறுப்பு, தெருட்சி

வொண்ணுதும் செய்திருக்கிறது. பல பகுதிகளில் இதுவரை ஒரு போதும் இல்லாத அளவு பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது, அவைகளை அடையாதார் துன்பங்களைப் பெரிதாக்கி நம்பிக்கைகளைச் சிதறடித்திருக்கிறது.

முன்னேற்றமடைய முயலும் நாடுகள், சூழ்நிலைகளின் காரணமாகப் புதுப் புது முட்டுக் கட்டைகளைத்தான் காண்கின்றன. இந்த முட்டுக்கட்டைகளை மனதிற் கொண்டு ஆராய்ந்தால் தான் அந் நாடுகள் அடைந்துள்ள பலா பலன்களை நாம் சரியாகக் கணிக்கவோ தகுந்தவாறு பாராட்டவோ முடியும்.

வளர்ச்சி பெறுங் கருத்து பழையது தான். ஆயினும் இந் நவீன காலத்தில் அதற்கு ஒரு புதுப் பொருளும் குறிக்கோளும் உண்டு. வளர்ச்சிக்கான முயற்சியில் இருவேறு வகைக் கருத்துக்கள் இணைந்திருக்கின்றன. முன்னேற்றத்தில் வைக்கும் நம்பிக்கை ஒன்று. மனிதன் தன் முன்னேற்றத்தைத் தானே சாதித்துக் கொள்ளலாம் என்பது மற்ருென்று.

மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே நவீன முன்னேற்றமும் தொடங்கி விட்டது. ஆனல் தொழிற் புரட்சியின் பின்தான் அதன் வேகம் அதிகம். எல்லா இடங்களிலும் தொழிற் புரட்சி ஒரே மாதிரியாக இல்லாததால் பல்வேறு பகுதிகளுக்குமிடையே கடும் முரண்பாடான நிலைகள் உண்டாகி விட்டன. தொழில் முன்னேற்றம் அடைந்துள்ள நாட்டிற்குள்ளே கூட பல்வேறு பகுதிகளுக்கிடையே இது உண்மை. செல்வ முன்னேற்றமடையாத சில பகுதிகள் அப்படியப்படியே இருக்கின்றன. தொழில் மயமான நாடுகளுக்கிடையேயும் உலகின் பிற பகுதிகளுக்கிடையேயும் உள்ள ஏற்றத்தாழ்வோ மிக அதிகம்.

இந்த ஏற்றத் தாழ்வை அகற்றவும் பல நூற்ருண்டுகளாக இருந்துவரும் தேக்க நிலையைப் போக்கவும் தொழிற் புரட்சி அடையாத நாடுகள் தங்கள் வளங்களைத் திரட்டியுள்ளன. உலக மக்கள் சமுதாயமும் பொருள்வளங்களை ஏராளமாக அனுப்பி என்றுமில்லா அளவில் அவைகளுக்கு உதவியிருக்கிறது.

வளர்ச்சிக்காக உலக நாடுகள் ஒத்துழைப்பு என்பது தற்காலிகமானது; கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்ற நிலையில் இருப்பது. இது பெரும்பாலும் அனுபவம் இல்லாத துறை. பூர்வாங்க ஆய்விற்கான செலவு எவ்வளவு அதிகமோ, அவ்வளவு பலன் நிச்சயமில்லாதது. சில சமூக, பொருளாதார திட்டங்கள்-பெரும்பாலும் சோதனைக்காக நிறைவேற்றப்படுபவை—நல்ல பலன் தருகின்றன. மற்றவை அவ்வாறில்லை. அதிகப் பலன் தரும் திட்டங்கள் அவைகளை ஒதுக்கித் தள்ளி வருகின்றன.

அபிவிருத்தித் திட்டங்களின் கட்டுக் கோப்புகளை ஆராய்வது எங்களுடைய குழுவின் பணியல்ல. குறைந்த வருவாயுள்ள பகுதியினரின் வளர்ச்சிக்கான பன்னாட்டுக் கூட்டுறவு முயற்சியில், செல்வ வளம் உள்ள, வளர்ச்சியடைந்த நாடுகள் தொடர்ந்து தங்கள் சக்தியையும் பொருளையும் செலவிடுவது அவசியமா? அவசியமாயின், இரு தரப்பும் என்ன நடவடிக்கைகள் எடுத்தால் அம் முயற்சி வலுப்பெறும்? இதை ஆராய்வதே எங்கள் பணியாக இருந்தது.

வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு நடைமுறைச் சாத்தியமானது மட்டுமல்ல, அத்தியாவசிய முக்கியத்துவம் வாய்ந்ததுங்கூட என்பதில் எங்களுக்கு உறுதி ஏற்பட்டிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகால அனுபவத்தை நாங்கள் ஆராய்ந்தது இந்நம்பிக்கையை உறுதிப்படுத்தியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள மக்களிடமிருந்தும் அரசிடமிருந்தும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு அளிக்கப்பட்ட உதவியும் அதனல் ஏற்பட்ட பலன்களும் உலக விவகாரங்களில் அபூர்வமாகக் காணப் பெறும் தீர்க்கதரிசனத்துக்கு ஒரு சான்ருகத் திகழ்கின்றன. ஆகவே உதவும் முயற்சியை நாம் கைவிட்டோமானல் அது வருந்தத்தக்கதே.

ஆயினும் வளர்ச்சித் திட்ட முயற்சிகளைப் பற்றி ஐயமும் அச்சமும் இருந்து வருகின்றன. குறிப்பாக, உதவி அளிக்கும் பெரிய நாடுகளில் தற்போது பெரும்பாலும் தயக்கமும் அவநம்பிக்கையும்—மறுதலிப்பும்கூட— காணப்படுகின்றன. உதவிபெறும் நாடுகளில் கூடச் சிலவகை உதவிகளைப் பற்றி ஐயப்பாடுகள் வளர்ந்து வருகின்றன. இதனல் வளர்ச்சிக்கான ஒத்துழைப்புக் கடினமாக இருக்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர்ந்து வரும் நாடுகளிலும் இன்று பலர் அவநம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கிருர்கள்—உதவி பலன் தரும் என்பதைப் பற்றி மட்டுமல்ல, ஒரு நாட்டிற்கு ஒரு நாடு உதவுவது சரியா என்பது பற்றியும் அவநம்பிக்கை இருக்கிறது.

உதவி அளிக்கும் நாடுகளில் சில அதன் மூலம் அரசியல் செல்வாக்குப் பெறவும் பொருளாதார அனுகூலம் அடையவும் முயன்றுள்ளன. அதனல், வளர்ந்து வரும் ஒரு சில நாட்டு அரசாங்கங்களின் தலைவர்கள் இதில் ஒருவகைக் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தைக் காண்கிருர்கள். உண்மையான உலக நாடுகள் ஒத்துழைப்பையோ மனிதகுல ஐக்கியத்தையோ இது காட்டுவதாக அவர்கள் கருதவில்லை.

உதவும் நாடுகள் சிலவற்றில், வளர்ச்சிக்கான உதவியில் மக்கள் அக்கறை குறைந்து, எதிர்ப்பு இருக்கிறது; 'செலவு அதிகம்', 'வீண்', 'பலன் இல்லை', 'அனுவசியம்' என்று அவர்கள் எதிர்க்கிருர்கள். எங்களுடைய அறிக்கையில் இந்த மறுப்புகளுக்கு மறுமொழி கூறியுள்ளோம்.

வளர்ச்சிக்கான உண்மையான ஒத்துழைப்பையும் உதவியையும் முழுமனதுடன் ஆதரிக்கும் மற்றும் பலர் இருக்கிருர்கள். ஆனல் தற்போது உதவும்

ராபர்ட்டோ டி ஒலிவெய்ரா காம்பாஸ் (பிரேஸில்)

சி. டகலஸ் டில்லன் (அமெரிக்கா)

வில்ஃபிரிட் குத் (மேற்கு ஜெர்மனி)

சர் ஆர்தர் லூயிஸ் (ஜமெய்க்கா),

ராபர்ட் இ. மார்ஜோலின் (ஃபிரான்ஸ்)

சாபுரோ ஓகிட்டா (ஜப்பான்)

Photos World Bank

நாடுகளின் கொள்கையில் குறுகிய அரசியல், வாணிக நோக்கம் தான் இருக்கிறது; அல்லது, தவறான வெளிநாட்டுக் கொள்கையுடன் இது நெருங்கிப் பிணைந்திருக்கிறது என்று இவர்கள் கருதுகிறார்கள்.

இவ்வாறு, உலக நாடுகளின் ஒத்துழைப்பிற்கான இப்புதிய பெருமைமிக்க முயற்சியின் வரலாற்றில் ஒரு நெருக்கடியான கட்டத்தை நாம் அடைந்துள்ளோம். இதில் ஒரு முடிவுக்கு வர வேண்டியவர்களாயும் நாம் இருக்கிறோம்.

இதில் ஒரு அடிப்படையான கேள்விக்கு நாம் பதிலளித்தாக வேண்டும். பலமும் செல்வ வளமும் இருந்தாலும், துன்பமும் குழப்பமும் நிறைந்து உள்நாட்டுப்பொருளாதார, சமுதாயச் சிக்கல்களால் பாதிக்கப்பெற்றுள்ள ஏழை நாடுகளின் துயரத்தைப் போக்குவதில் ஏன் அக்கறை காட்ட வேண்டும்? சுருக்கமாகச் சொன்னால், ஏன்தான் உதவ வேண்டும்?

முதல் காரணம் தார்மீக அம்சமே. செல்வரின் கடமை ஏழைக்கு ஈதலே என்றுதான் உலகம் ஏற்றுள்ள தார்மீகக் கோட்பாடுகளெல்லாம் கூறுகின்றன.

நல்வினைப் பயனால் செல்வர்களாக இருப்பவர்களின் கடமையை ஒவ்வொரு சமயமும் மனிதக்கோட்பாடும் எடுத்துணர்த்துகின்றன. பண்பாட்டின் வளர்ச்சியும் பெருக்கமும் தேசிய சமுதாயங்கள் உருவானதும்—அணு சக்திக் காலத்திலும் நாம் வாழ்வதைச் சாத்தியமாக்கியுள்ள தனியார், நாட்டினர் பொதுவிதி முறை ஆகியவைகளெல்லாம்—வளமும் திறனும் உள்ளவர்கள் அவைகளை இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையைத்தான் வலியுறுத்துகின்றன.

வளர்ச்சியையும் அதற்கான உதவியையும் நாம் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு இதுவே ஆழ்ந்த, நிலையான காரணம். இதை நாம் அலட்சியம் செய்து விடுவதனால் ஏற்படும் விளைவுகள் மனிதப் பண்பையே அற்றிடச் செய்யும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆயினும், சிறுசிறு தேசிய அல்லது தனிப்பட்ட சுயநலத்தின் காரணமாக இந்த இயல்பான உணர்வைப் பெரும்பாலான சமயங்களில் இழந்து விடுகிறோம். மேலும் வளர்ச்சிக்கான உதவி அளிக்க வேண்டுமென்பதற்கு இதுமட்டுங் காரணமல்ல.

இதற்குச் சமமான—சிலர் கருத்தில் இதனினும் உயர்ந்த—காரணம் வேறு ஒன்று உண்டு. உலக சமுதாயம் நாளுக்கு நாள் நெருங்கி வருவதால் சில தேவைகளும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளன. சில பொறுப்புக்களால் தேசிய நலன்கள்தாம் அடிப்படையானவை என்பது அற்றுப் போய்விடவில்லை; தேசியத்திற்கு அப்பாற்பட்ட பொறுப்புக்களும் புதிதாகச் சேர்ந்துள்ளன.

உதவியிலும் சரி மற்றவைகளிலும் சரி ஒரு நாட்டின் சொந்த நலத்தைப் பார்க்க வேண்டும் என்பது நல்ல அடிப்படையே. ஆனால் அச் சொந்த நலம் சீரிய நோக்கம் உள்ளதாகவும் தூர நோக்குள்ளதாகவும் தன் எல்லைகளுக்கு அப்பாலும் சிந்திக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

வளர்ச்சிக்கான ஒத்துழைப்பின் மூலம் நல்ல பொருளாதார, அரசியல் உறவை ஏற்படுத்த வேண்டும் என்பது உகந்த குறிக்கோள்தான். நல்ல பலன் தரக் கூடியதாயும் அது இருக்கும். உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் வாழும் ஏழை நாடுகள் வளர்ச்சியடைய முடியுமானால் தொழில்மயமான செல்வ வளமுள்ள நாடுகளில் அதிக முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படத்தான் செய்யும்.

இதற்கு நேர் மாறானதும் உண்மையே. ஒரு நாடு அல்லது மனிதனின் நலன் மற்றவர்களிடமிருந்து தனித்துப் பிரிக்கக் கூடியதல்ல. நாளுக்கு நாள் இது பட்டவர்த்தனமாய்த் தெரிகிறது. இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குப்பின், உலகத்தை விட்டு ஒதுக்கி ஒரு நாட்டின் தனிப்பட்ட எதிர் காலத்தை மட்டும் எண்ணிப் பார்க்க முடியாது.

போக்குவரத்து, செய்தித்தொடர்பு உற்பத்தி முறைகள், வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் உள்ள மற்ற பல அம்சங்கள் ஆகியவைகளில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால், அண்டை நாடுகளைக் கெடுத்து ஒரு நாடு வளர முடியும் என்ற நிலை இனி இராது.

இந்த உண்மைகளின் காரணமாக ஒரு நாட்டின் சொந்த நலம் என்பதில் புதுக் கருத்தோட்டம் ஏற்பட்டுள்ளது. இக்கருத்து பல முறை மீறப்படுகிறதானாலும் இதன் முக்கியத்துவம் குறையவில்லை. ‘‘உலகின் வளங்கள் எல்லாம் மிக அதிகப் பலன் தரக் கூடிய ஓர் உலக அமைப்பை உருவாக்க வேண்டும். அதில் தான் ஏழை, பணக்கார நாடுகளின் நலன் அடங்கியிருக்கிறது’’ என்பதையே இவ்வுண்மை வலியுறுத்துகிறது.

இன்றையக் கவலைகளை விட்டு நாளைய வாய்ப்புக்களைப் பார்க்கக்கூடியவர்களை ஊக்குவிக்கும் எண்ணம் இதுவே.

செல்வ நிலையில் உள்ள நாடுகள் ஒன்று சேர்ந்து, பிற்பட்ட நாடுகள் வளர்வதற்குக் கூட்டு முயற்சி எடுத்தால் தான் இக்கனவை நனவாக்கலாம் என்பது கடந்த இருபதாண்டு கால அனுபவமாகும்.

வளர்ச்சியடையாத நாடுகளில் உள்ள நடத்தையை அகற்றுவதற்கு நம் நாட்டில் உள்ள செல்வர்களுக்கும் வளமான பகுதிகளுக்கும் ஏன் வரி விதிக்க வேண்டும் என்று இப்போது நாம் கேட்பதில்லை. இவைகளெல்லாம் இயல்பாகவே ஒரு சமுதாயத்திற்குள்ள பொறுப்புக்கள் என்பதை ஒப்புக்கொள்கிறோம். புதிய தொழில் நுணுக்க அறிவால் கிட்டக்கூடிய பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்குச் சாத்தியமான முயற்சியைத் தாங்களே விரும்பி யெடுத்துக் கொள்ளும் சக்தி படைத்த (வளரும்) நாடுகளுக்கு உதவும் தேசியப் பொறுப்பை நாம் மேற்கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது.

வளரும் நாடுகளின் நோக்கத்தைப் பற்றி நாம் ஐயப்படாது இருப்போமாக. அவைகளுக்கு வளர்ச்சி என்பது ஏதோ ஒரு ஆசை அல்ல; தவிர்க்க முடியாத ஓர் அவசியம். மேலும் சில நூற்றாண்டுகளுக்கு அவை தூங்கிக்

அமைதியற்ற புத்துலகம்

கொண்டிருக்க விரும்பவில்லை. இன்னும் முடிவடையாத புரட்சியின் ஓர் அங்கம் அது; அவர்களுடைய விடுதலைப் போராட்டத்தின் மற்றொரு கட்டம்.

வளர்ச்சி நடைபெறுமா நடைபெறாதா என்பதல்ல கேள்வி. அது நடைபெற்றே தீரும். பிற நாடுகளுடன் உள்ள கசப்பான உறவாலும் உதவிகள் படிப்படியாகக் குறைந்து கொண்டு போவதாலும் விரக்திப்பட்ட ஒரு சூழ்நிலையில், ஆமை நடை போன்ற மெதுவான வளர்ச்சியை ஏற்பதா? அல்லது வளர்ச்சியின் ஒன்று திரட்டப்பட்ட ஆக்கபூர்வமான அங்கமாக ஏழை நாடுகள் தொழிற் புரட்சியை விரைவில் ஏற்குமாறு செய்து, அவர்கள் முயற்சியிலும் அக்கறையிலும் பங்கு கொள்வதன் மூலம் சச்சரவுகளையும் அபாயங்களையும் குறைத்து விரைவில் உருப்படியான பலன்கள் கிடைக்க உதவுவதா? இது தான் கேள்வி.

வளரும் நாடுகள் இவ்விரண்டில் ஒன்றைத் தாங்களே விரும்பி முடிவு செய்ய முடியாது. ஆனால் வளர்ச்சி அடைந்த நாடுகளால் முடியும். பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதால் தங்கள் மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதை அவை உணரவேண்டும்.

உலகில் உள்ள நாகரிகமடைந்த சமுதாயங்களிலெல்லாம் முக்கியமாகக் கருதப்படுவது மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பற்றிய கருத்துக்களே. அக் கருத்துக்களே அத்தகைய சமுதாயங்களை உருவாக்கி ஊக்குவிக்கின்றன.

இந்த உரிமைகளை உலகிலுள்ள மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு மறுத்தால் நல்ல நிலையில் உள்ள நாடுகளின் நலன்களையும் கொள்கை கோட்பாடுகளையும் அது பாதிக்காமல் இருக்குமா? நான் எண்ணவில்லை.

உலகில் உள்ள செழிப்பும் வலுவும் உள்ள நாடுகள் பலவீனமான, ஏழை நாடுகளைப் புறக்கணித்தபின் தங்களுக்கு ஏற்படக் கூடிய கதியை ஆய்ந்து பார்க்கவேண்டும்.

இவ்விருவகை உலகங்களுக்குமிடையே உள்ள ஏற்றத் தாழ்வு நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டு போய் நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளது. இதன் காரணமாகப் பயங்கரமான விளைவுகள் ஏற்படுமென அஞ்சப்படுகிறது. புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது பல சந்தர்ப்பங்களில் தவறான முடிவுகளுக்கு இடமளிக்கிறதென்பது உண்மையே.

உதாரணமாக, இரு நாடுகளில் உள்ள மக்களின் சராசரி வருமானம் 15:1 என்ற வீதத்தில் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். இதன் காரணமாக, ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டைப் போன்று 15 மடங்கு நன்றாக வாழ்வதாகப் பொருளாகாது. வருமான உயர்வை விட வாழ்க்கையின் தர உயர்வில் எவ்வளவோ இருக்கிறது.

மக்கள் நெருக்கடி அதிமாயிருக்கும் ஒரு பெரிய நகரத்தின் உயர்ந்த வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கும் ஒருவனையும் இலங்கையில் நல்ல சூரிய வெளிச்சத்தில் வாழும் ஒரு கிராம வாசியையும் புள்ளி விவரங்களை மட்டும் வைத்து ஒப்பிட முடியாது.

தங்கள் சிக்கல்களைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் ஆற்றல் படைத்த ஒரு சில நாடுகள் தங்களுடைய சக்தியைப் பயன்படுத்தி வான வெளிக்குள் நுழைய பெரும்பாலான நாடுகள் அப் புது உலகினுள் நுழைய முடியாமற் போய் விட்டால் அல்லது, நுழைவதற்குக் காலதாமதமானால் அதனால் ஏற்படக்கூடிய விளைவு பயங்கரமாய் இருக்கும்.

இதனாலெல்லாம் தேசிய அரசாங்கங்கள் மறைந்து உலக அரசாங்கம் அமைய வேண்டும் என்று கூற வரவில்லை. அதற்கு மாறாக, வரலாற்றின் இந்தக் கட்டத்தில் தேசிய அரசாங்கங்களுக்கு உரிய முக்கியமான இடம் இருக்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் மற்ற நாடுகளின் கதியைப் பற்றி ஆழ்ந்த அக்கறை செலுத்தப் பெற வேண்டும். அதிகப் பலனுள்ள ஒத்துழைப்பில்— வளர்ச்சிக்கான ஒத்துழைப்பும் இதில் அடங்கும் — இது பிரதிபலிக்கவேண்டும்.

ஒவ்வொரு நாட்டு அரசுக்கும் மக்களுக்கும் அந்நாட்டுச் சிக்கல்களில் தனிப் பொறுப்பு உண்டு. ஆனால் அந்தந்த நாட்டு எல்லையுடன் அப் பொறுப்புக்களை நிறுத்தி விடாத அளவிற்கு உலகம் இப்போது குறுகி வந்துவிட்டது.

தேசிய அரசாங்கம் இதில் வெற்றி காணா விட்டால் குறைந்த அளவு சில அடிப்படையான சமூக, பொருளாதார முன்னேற்றம் எல்லா மனிதர்களுக்கும் கிடைப்பதில் ஒத்துழைக்கா விட்டால்-அது மறைந்து விடும். அவ்வாறு மறைவதற்கு நியாயமும் உண்டு. உபயோகமற்ற சமூக, அரசியல், அமைப்புக்களை ஒழித்துக் கட்டுவதில் மனித வர்க்கம் தயவு தாட்சண்யம் பார்க்காது.

இவை புதிதாகக் கண்டுபிடித்த உண்மைகள் அல்ல. பல ஆண்டுகளாக ஒப்புக் கொள்ளப் பெற்ற கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப் பெற்ற உண்மைகள் தாம். உலக நாடுகள் வளர்ச்சிக்கு உதவ வேண்டிய பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருப்பதை விட, கடந்த போருக்குப் பின் வேறொரு சிறந்த



Photo © Ed van der Elsken, Amsterdam. From "Sweet Life," Harry N. Abrams, New York

காரியத்தை நாம் செய்ததில்லை. அதை இப்போது நாம் கை விட்டு விட வேண்டுமா?

ஒரு வேளை இது கைவிடப்படலாம். வளர்ச்சியடைந்த நாடுகள் - மிகவும் செழிப்பானவை உள்பட-சிலவற்றில் இப் பொறுப்பை நிறைவேற்றி வைக்க அரசியல் ஆதரவு குறைகிறது. இவ்வாறு ஆதரவு குறைவதற்கான சில காரணங்களை நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். மற்றொரு காரணம் வெகு விரைவில் மிக அதிகமான பலனை எதிர்பார்ப்பதாகும். திடீர் வளர்ச்சி என்பதொன்றில்லை என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள்.

குறுகிய கால அரசியல், இராணுவ காரியங்களுக்காக அல்லாது, வளர்ச்சிக்காக மட்டும் எவ்வளவு உதவி தரப்பட்டது என்பதைப் பற்றிய சரியான கருத்துக்கள் இல்லாதது மற்றொரு காரணம். போர்க் கருவிகளின் ஏற்றுமதி, வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை என்று குறை கூற முடியுமா? அதே போன்ற உடனடியான அரசியல், இராணுவ காரியங்களுக்காக ஒதுக்கப் பெற்ற உதவியால் வளர்ச்சி ஏற்படவில்லை என்று குறை கூறுவதும் விவேகமாகாது.

உண்மையில் சாதிக்கப் பெற்றுள்ளவைகளைப் பற்றி சரியான கருத்துக்கள் இல்லாததையும் இவைகளுடன் சேர்த்துக் கொள்ளலாம். இதுவரை விதித்துள்ளவை என்ன, வளர்ச்சிக்கான முயற்சி நிலையானதாக இருந்தால் வளர்ந்து வரும் நாடுகளில் இனி என்ன சாதிக்கலாம் என்பதைப் பற்றி தவறான கருத்து இருக்கிறது. மொத்த தேசிய உற்பத்தியின் பெருக்கம் எல்லாம் ஆகி விடாது. ஏனென்றால் வளர்ச்சி என்பதில் மொத்த தேசிய உற்பத்தியை விட வேறு எத்தனையோ அம்சங்கள் இருக்கின்றன. குன்னார் மிர்தால் கூறுவது போன்று, ''சமுதாய அமைப்பு முழுவதும் மேல் நோக்கிச் செல்வதுதான் வளர்ச்சி''.

ஆனால் அதே சமயம், மொத்த தேசிய உற்பத்தி, ஏற்கெனவே அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறிக்கத்தான் செய்கிறது. வளரும் நாடுகளிலெல்லாம் 1950க்கும் 1968க்கும் இடையே மொத்த தேசிய உற்பத்தி அளவு ஒரு பாராட்டத்தக்க அளவு—அதாவது, 4.8 சதவீதம்—கூடியுள்ளது. 1960ஐ மட்டும், எடுத்துக் கொண்டால் ஐக்கிய நாடுகள் சபையின் குறிக்கோள் அளவான 5 சதவீதத்தை அவை எட்டியிருக்கும்.

மக்களின் சராசரி வருமானத்தை எடுத்துக்கொண்டாலும் வரலாற்றுப் பூர்வமாகக் குறிப்பிடத்தக்க சாதனைதான். 1955க்கும் பின் 41 வளரும் நாடுகளில் பத்தாண்டுகளாக ஒவ்வொருவரின் வருமானமும் 2சதவீதமோ அல்லது அதற்கு மேலோ கூடியுள்ளது. மேற்கு ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளும் வட அமெரிக்காவும் 1850க்குப் பின் ஒரு நூற்றாண்டில் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அளவு இது.

இந்த 41 நாடுகளும் - வளரும் நாடுகளில் இவை மூன்றில் ஒரு பங்கு ஒரு குறிப்பிட்ட பூகோளப் பகுதியையோ, இனத்தையோ, மதத்தையோ சார்ந்தவையல்ல. ஒரே அளவு மக்கள் தொகையைக் கொண்டவையுமல்ல என்பது அதிக உற்சாகம் அளிக்கிறது. ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் ஆசியாவிலும் இந்நாடுதான் சம எண்ணிக்கையில் இருக்கின்றன.

வெளிநாட்டுப் பண, தொழில் நுணுக்க உதவியால்தான் இந்த முன்னேற்றம் ஏற்பட்டதென்று நான் உரிமை கொண்டாடவில்லை. நிச்சயமாக, அவ்வாறும் இல்லை. மொத்த முதலீட்டில் 85 சதவீதம் வளரும் நாடுகளில் உள்ள மக்கள் போட்டதுதான். மூலதனமாகவும் நிபுணர்களாகவும் பிறர் அளித்த உதவி, பெரும்பாலும், உரைமோராகப் பயன்பட்டிருக்கிறது. மிகவும் தட்டுப்பாடான வெளிநாட்டுச் செலாவணி கிடைத்ததால் இது பல சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாத உதவியாக இருந்தது.

ஆயினும் வளர்ச்சிக்கு அதிலும் மிக மிகக் குறைவான வாழ்க்கைத்



தரத்தை உடைய நாடுகளின் வளர்ச்சிக்கு - உடலை வருத்தும் கடின உழைப்பும் சேமிப்பும் அடிப்படையானவை. இதை அந்நாட்டு மக்களே அளித்தார்கள்.

இருபதாண்டுகளுக்கு முந்திய நிலையில் நம் கண்ணேட்டத்தைச் செலுத்துவது எளிதல்ல. அச்சிந்தனை நம்முடைய தவறுகளில் பலவற்றை நினைவூட்டுகிறது. மேலும் மிகுந்த வறுமையிலும் எழுத்தறிவின்மையும், திறமையின்மையிலும் நிலையற்ற ஆட்சியிலும் உழன்று கொண்டிருந்த நாடுகளில்—வளரும் நாடுகளில் பெரும்பாலானவை அப்படித்தான் இருந்தன. குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட முடியுமா என்று 1945 வாக்கில் நாம் எண்ணினேமென்பதை இப்போது நினைவு படுத்திக் கொள்வது நல்லது.

முன்னேற்றம் சாத்தியமா என்று ஐயப்பட்டது தவறு. வளர்ச்சிக் குறைவு என்பது ஒரு விஷவளையம் அல்ல. அதை அகற்றும் சக்தி மனிதனுக்கு இருக்கிறது. பேராசிரியர் ஆர்தர் லூயின் அழுத்தமான வாசகங்களில் கூறுவோமானால், ''வளர்ச்சிக் குறைவு துடைத்துவிடக் கூடிய கார்ரியம்தான்''. ஆனல் அவ்வாறு செய்வதற்குக் கூட்டுறவுடன் கூடிய பன்னாட்டு முயற்சி அவசியம். அதற்கு நமக்கு நூறு ஆண்டு கால அவகாசம் கிடைத்துக் கொண்டிராது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் அறுபதிற்கும் மேற்பட்ட நாடுகள் விடுதலை அடைந்திருக்கின்றன என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் சாதனையின் முக்கியத்துவம் மேலும் நன்கு தெரியும். மனித சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்விற்கு எதிராக அவர்கள் குரல் எழுப்பியுள்ளார்கள்.

புதிதாக வளர்ச்சி பெறும் நாடுகளைப் பாதித்துள்ள பொருளாதார பலவீனமும், அரசியல் அனுபவக் குறைவும், அரசியல், இன, கலாச்சார முரண்பாடுகளும் நமக்குத் தெரியும். ஆகவே குழப்ப நிலையுடன் ஆரம்ப காலத்தில் இருந்த நெருக்கடியான கட்டத்தை, வலுப்பெற்ற அரசியல் அமைப்புக்களுடன் அவர்கள் கடந்து விடுவார்கள் என்று யார்தாம் முன் கூட்டிக் கூறியிருக்க முடியும்? ஆழ்ந்த நம்பிக்கையுடன் சிறந்த தீர்க்க தரிசனத்துடனும்தான் புது நாடுகள் இதைச் சாதித்துள்ளன. அதேசமயம் நல்வினைப்பயனக, இதை தீர்க்கத் தரிசனத்துடனும் நம்பிக்கையுடனும் மனித, பொருள் வளங்களை அனுப்பிச் சில நாடுகள் அவைகளுக்கு உதவியுள்ளன.

இந்த நம்பிக்கைக்கும் தீர்க்க தரிசனத்திற்கும் மற்ருெரு சோதனைக் கட்டம் ஏற்பட்டுள்ளது. ஏனென்ருல், வளர்ச்சிப் பணியின் ஒரு முக்கியமான கட்டத்தில் நாம் இருக்கிருேம்.

முன்னேற்றத்தைக் காட்டும் புள்ளி விவரங்கள் நமக்கு நம்பிக்கை அளிக்கின்றன. என்ன செய்ய முடியும் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஆயினும் பணியின் பெரிய அளவையும் தேவையையும் எண்ணிப் பார்க்கும் போது—ஒதுங்கி விடும் மனப்பான்மை தற்போது இருப்பதையும்

(தொடர்ச்சி 33 ஆம் பக்கம் பார்க்க)

'இன்று செயலாற்றவில்லையெனில் நாளை கேடு விளைவது உறுதி'

வளர்ச்சி என்பது, இறந்தகாலத்தை விட இனி எதிர்காலத்தில், வளமார்ந்த நாடுகளுக்கும் வளங்குன்றிய நாடுகளுக்கும் செயல் திறமான சீரிய கூட்டாண்மையாக இருக்க வேண்டும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிருேம். ஒதுக்கப்படும் உதவி பயன்படும் பாங்கினை நன்கு புரிந்து அதில் பங்கெடுத்துக் கொள்ளாமல் விலகி நின்று கொண்டு பெருமளவில் உதவி அளிப்பதோ அதைப் பெறுவதோ பயனற்றதாகும். எந்த நாட்டிற்கும் வேற்று நாட்டின் கொள்கையாக்கத்தில் தலையிடுவதற்கு உரிமையில்லை. ஆனல், ஆக்கவளத்தினை அறிந்து உதவும் எந்த ஒரு நாடும் உதவிபெறும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றிய முடிவுகளைக் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவும் தெரிந்து கொள்ளவும் உரிமை உடையது.

இக்கூட்டாண்மை மாறுபடும் அன்ருட அரசியலில் இருந்து தனித்திருக்க வேண்டும்; நீண்டகால வளர்ச்சிக் குறிக்கோள்களை மையமாகக் கொண்ட பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இதுவே முறையான அடிப்படையாகும். ''உதவி'' என்ற பெயருக்குரியதும் அரசாங்கப் பொறுப்பில் வருவதுமான வளவுதவியோடு, தனியார் முதலீடு, வாணிபம் இவற்றைப் பற்றியும் அக்கூட்டாண்மை அமைதல் வேண்டும்.

வளர்ச்சிகாணும் நாடுகளுக்குப் போகும் மொத்த வளநிதி உதவியில் ஏறத்தாழ பாதியளவாக உள்ள தனியார் துறைப் போக்குகள் வரிகொடுப்போருக்குச் சுமையன்று. அவை முதலீடு செய்பவருக்கு இடர் வரவாகவோ பயன் வரவாகவோ இருக்கலாம். ஆனல், வளர்ச்சி மதிப்பைக் கணக்கில் எடுத்துக் கொண்டாலும், அதைத் திரும்பச் செலுத்தும் பொறுப்புடையோர் மீது அது சுமையாகவே இருக்கிறது. சில வளர்ச்சியடையும் நாடுகளின் மீதுள்ள கடன் செலுத்தும் பொறுப்பு புதுக்கடனுதவி பெறுவதை விஞ்சி நிற்கிறது.

இரண்டாவதாக, அரசாங்க உதவி, முன்பு அளித்தது போன்ற குறுகிய கால குறியிலக்குகளை விட்டு, பொருளாதார வளர்ச்சியேற்றும் வகையில் இருக்க வேண்டும் என்பது தெளிவு. விரைவான வளர்ச்சி வேண்டிய நாடுகள், அவற்றின் சமூக அமைப்பின் நீண்டகால முன்னேற்றத்திற்குக் காத்திருக்க வேண்டிய நிலையுள்ளது. ஆனல், பெரும்பான்மையான நாடுகளில், தெளிவான வளர்ச்சி முன்னேற்றத்திற்கான தீவிர முயற்சி எடுத்தல் முடியும். அதுவே தன்னூட்ட வளர்ச்சிக்கும், அதிலிருந்து பிரிக்க சமுதாய முன்னேற்றத்திற்கும் அடிப்படையாகும்.

சுருங்கக்கூறினல், உதவிபெறும் நாடுகளின் பொருளாதார சாதனைகளைக் கருத்திற்கொண்டு சமுதாய மாறுதல்களையும் புறக்கணியாமல், தெளிவான, தீர்க்கமான குறிக்கோளை நாடியே இனி உதவி அளிக்கப்படுதல் வேண்டும்.

1970ஆம் ஆண்டுகளின் மொத்த இலக்கு ஆண்டிற்குச் சராசரி 6 சதவிகித வளர்ச்சியாக இருத்தல் வேண்டும் என்று நாம் எண்ணுகிருேம்.

இது சராசரி வளர்ச்சி வீதமாக இருக்கும் என்று நாம் எண்ணி ஏற்கிருேம்.

சில நாடுகளின் வளர்ச்சி அதிகமாகவோ குறைவாகவோ இருக்கலாம் எனினும், இந்த உலகஇலக்கு, நாடுகளின் முன்னேற்றத்தை அளக்கவும், வெற்றியைக் கணிக்கவும் பயன்படும் அளவுக்குறியாகிறது.

எளிய வளர்ச்சிவீதமும் உலகஇலக்கும் போதுமானதல்ல என்பதையும் நாங்கள் உறுதியாக நம்புகிருேம். தானக வளர்ச்சியுறுவதும், அன்னிய நாடுகளின் சலுகை நிதிபெருமல் பேணப்படுவதுமான நிலையைப் பொருளாதாரம் எய்தும் வகையில் உதவித் திட்டம் அமைதல் வேண்டும். இதுவே, வளர்ச்சி உற்றதும் உறுவதுமானநாடுகளுக்கு மனநிறைவளிப்பதாகும்.

இதற்கான சாதனங்கள் சில ஏற்கெனவே உள்ளன. அடைந்த சாதனைகளையும் அடைய வேண்டிய உதவித் தேவைகளையும் ஆயும் கூட்டுக்குழுக்கள், கலந்துரைக் குழுக்கள், வட்டார அரங்குகள் இவற்றின் பணி நமக்கு ஊக்கமூட்டுகின்றன. இவ்வகை முறைமை இப்பொழுது இல்லாத நாடுகளிலும் பகுதிகளிலும் வர வேண்டும் என்று நாம் விரும்புகிருேம். இதற்காக உலக வங்கியும் வட்டார வங்கிகளும் இந்த நிறுவனங்களுக்கு, ஊட்டமளிக்க முனைவதோடு தேவையான இடங்களில் புதிய நிறுவனங்களை ஏற்படுத்த உதவவும் வேண்டுமென்று பரிந்துரைக்கின்ருேம். வளர்ச்சி முறையின் எல்லா நடவடிக்கைகளிலும் அதிகமான கூட்டியக்கமும் விரிவான கலந்துரைகளும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான், உதவிக்கான உறவு உரமுடையதாகவும், உளநிறைவளிப்பதாகவும் அமையும்.

நாடுகளிடையேயுள்ள உதவி முறைமையில், பன்முகப் பாங்கு அதிகமாக, வேண்டும் என்பதை, வள உதவி வழங்குவதில் கூட்டாண்மை என்ற கொள்கையும், ஒப்பிய அளவுச் சாதனைகளுக்கேற்ப அதிக உதவி ஒதுக்குதல் என்ற கொள்கையும் வலியுறுத்துகின்றன. பன்முக நிறுவனங்களிலிருந்து வரும் சலுகை நிதி அரசாங்க வளர்ச்சி உதவியில் 11 சதவிகிதமேயாகும். 1975ஆம் ஆண்டு வாக்கில் அது 20 சதவிகிதமாவது ஆகும் என நம்புகிருேம்.

எது முடியும், எது முடிந்தது என்பது பற்றி நடுவாகக் கணிப்பீடு செய்வதற்கும் பன்முக நிறுவனங்கள் தனிவாய்ப்புப் பெற்றுள்ளன. ஆனல், அவை அமைப்பிலும் ஆட்சிமுறை

கடந்த 20 ஆண்டுகளில் மின்னுற்றல் உற்பத்தி ஆசியாவில் 7 மடங்கும், ஆப்பிரிக்காவில் 5 மடங்கும், இலத்தீன் அமெரிக்காவில் 4 மடங்கும் பெருகியுள்ளது. உலகின் பல பகுதிகளில் உற்பத்தியைவிட தேவை மிகுந்துள்ளபோதிலும், மின் உற்பத்தியானது வளரும் தொழில்களின் தேவைகளை நிறைவேற்றி, பயிர்களுக்கு நீர் பாய்ச்சி, நகரவாசிகளுக்குப் பல வசதிகள் அளித்து, கிராம மின்சார வசதிக்கும் வழி வகுத்துள்ளது.



Drawing © "Condelec" magazine, Buenos Aires

ஆப்பிரிக்காவின் வளர்ச்சிக்காக உலக வங்கியும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும் அளித்து வரும் உதவி அண்மையில் பெருகியுள்ளது. 1969, மார்ச் வரை வழங்கப்பெற்ற கடனுதவியும் முதலீடும் 200 கோடி டாலராகும் அது சாலைகள், இருப்புப் பாதைகள், குழாய் இணைப்புகள், நீர் மின்சாரத் திட்டங்கள் அமைக்கவும், கல்வியையும் தொழில் நுட்பப் பயிற்சியை வளர்க்கவும், தொழில், கனிப் பொருள் உற்பத்தியைப் பெருக்கவும் பயன்பட்டுள்ளது. சுரங்க வேலை மிகுதியாக நிகழும் கேபனில் மாங்கனீஸ் கலவை குவிந்து கிடப்பதைப் படத்தில் காணலாம்.



செல்வ நாடுகள் தமது மொத்த ஆக்கத்தில் 1% தர இயலாதா?

யிலும் திறம்பட்டிருந்தால்தான் நாம் எதிர்நோக்குகிறபடி பெரும்பங்கு ஏற்க முடியும்.

இதனால் இருமுக உதவி குறைய வேண்டும் என்பது பொருளன்று. எங்கள் பரிவுரைகளின் பயனாய் வரும் அதிக உதவியில் மூன்றில் இரண்டு பங்கு இருமுகக் கால்வழிகள் மூலம் வருவதாகும்.

''நாடுகளிடை வளர்ச்சிக் குழு வலுவுடன் செயல்படவேண்டும்'' என நாங்கள் குறித்துணர்த்துகிறோம். வளர்ச்சித் தேவைகள் சாதனைகள் இவற்றோடு தொடர்பில்லாத அரசியல் உறவுகள், வரலாற்று நிகழ்வுகள் இவற்றைவிட பொருளாதாரச் சாதனைகளை வலியுறுத்தும் உதவியளவைக் கணிக்கும் முயற்சியில் வழி காட்ட ஏற்றது ''நாடுகளிடை வளர்ச்சிக்குழு'' தான். இருமுக, பன்முகச் சாதனங்களை இன்னும் நன்கு சீருடன் ஒழுங்கு பட்ட நிர்வாக முறையாக்குவதற்கு ஏற்ற இணைந்த முறை அமைப்பிற்கு ''நாடுகளிடை வளர்ச்சிக் குழுவே'' மையமானதாகும்.

உதவியின் பங்கீடும் அமைப்பும் வளர்ச்சிபெற்று சீராவதுடன் அதன் அளவும் அதிகமாக வேண்டும். குறிப்பாக, வளர்ச்சியுற்ற நாடுகளின் மொத்த விளைபயனில் ஒரு சதவிகிதமாவது பொதுத்துறை, தனியார் துறைகள் வழி வளர்ச்சியுறும் நாடுகளுக்கு மாற்றப்படவேண்டும் என்று ஒப்பிய குறிக்கோளை உறுதி செய்ய வேண்டும்.

கொள்கையளவில் எல்லா நாடுகளும் இந்த ஒரு சதவீதக் குறியிலக்கை ஒப்புக் கொண்டாலும், உடனே அவை இந்த இலக்கினை எட்டும் என்று நாங்கள் நம்புவதற்கில்லை. சில நாடுகளுக்கு இலக்கினை எட்டுவதும் அதற்கான ஒதுக்கீடு, ஒப்பீடு, செலவு செய்வது இவை ஏலாததாகின்றன. எனினும், 1975 ஆம் ஆண்டு வாக்கில் இக்குறிக்கோளை எட்டுவது அல்லது விஞ்சுவது ஏலுவதும் இன்றியமையாததுமாகும் என நம்புகிறோம். வளர்ச்சியுற்ற நாடுகளனைத்தும் இந்தக் கெடுவை ஏற்று, அதை எய்துவதற்கென எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிவித்து, அடைந்த முன்னேற்றத்தையும் அப்போதைக்கப்போது அறிவித்தல் வேண்டும்.

வளர்ச்சிக்கான அரசுத்துறை உதவிதான் வரிகொடுப்போருக்குப் பாரமாகவுள்ளது. 1975ஆம் ஆண்டுவாக்கில் இது நாட்டின் விளைவுப் பயனில் 7 சதவிகிதத்தை எட்ட வேண்டியது மிக முக்கியமானதாகும். கூடுதலான சராசரி ஆண்டுத்தொகை, ஏறத்தாழ 15,000 இலட்சம் டாலர்கள் இந்த இலக்கை ஏட்டுவதற்குத் தேவைப்படுகிறது. வளர்ச்சிபெற்ற நாடுகளின் மொத்த விளைபயனின் ஆண்டுப்பெருக்

வளர்ச்சிக்குப் பண உதவி

உலக வங்கி பன்னாட்டு நிதி உதவி நிறுவனம், பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் ஆகிய மூன்று உலக வங்கித் தொகுதி நிறுவனங்களும் ஐ. நா. வளர்ச்சித் திட்டமும் வளர்ச்சிக்காக நிதி உதவி அளிக்கின்றன.

உலக வங்கி: (சீரமைப்பு வளர்ச்சிக்கான பன்னாட்டு வங்கி) 1947 முதல் கடனுதவி வழங்கியதிலிருந்து வளர்ச்சிக்காக நிதியளிப்பதில் பழுத்த அனுபவம் பெற்றுவிட்டது. மின், போக்குவரத்து முதலியவற்றில் தொடங்கிய உதவி, விவசாயம், தொழில், கல்வி ஆகிய பற்பல துறைகளுக்குப் பரவி விட்டது. வங்கி தனது உறுப்பு நாடுகள் (110) வளர்ச்சித் திட்டங்களை வகுக்கவும், அவற்றிற்குப் பொருளாதார கொள்கை பற்றி அறிவுறுத்தித் திட்டங்களைத் தீட்டி வளர்ச்சி சார்ந்த சிக்கல்களை ஆயவும் துணை செய்கிறது.

பன்னாட்டு நிதி நிறுவனம்: 1956இல் நிறுவப்பெற்ற இந்நிறுவனம், தனது உறுப்பு நாடுகள் (இன்று 91) அரசாங்க உறுதி பெறாத கடன், முதலீடு ஆகியவற்றினால் தனியார் துறையை வளர்க்கத் துணை செய்கிறது சுரங்கம், தொழில் துறைகளுக்குப் பண உதவி அளித்து வந்த இந்நிறுவனம் இப்போது உணவுப் பக்குவப்படுத்தல், பங்கீட்டுப் பணிகள், சுற்றுலா போன்ற புதிய துறைகளில் ஈடுபடுகின்றது.

பன்னாட்டு வளர்ச்சிக் கழகம்: 1960இல் நிறுவப்பெற்ற இக்கழகம் ஏழை நாடுகளுக்குத் தனிச் சலுகை முறையில் பண உதவியளிக்கிறது. இது தனது 102 உறுப்பினர்களுள் 18 செல்வ நாடுகளிடமிருந்தும், உலக வங்கியிடமிருந்தும், தனது நிதித் தொகையின் பெரும்பகுதியைப் பெறுகின்றது.

கடந்த 10 ஆண்டுகளாக உலக வங்கித் தொகுதி நாடுகள் ஆண்டுக்கு 100 கோடி டாலர் வளர்ச்சிக்கென முதலீடு செய்துள்ளன.

ஐ. நா. வளர்ச்சித் திட்டம்: குறைந்த வருமானமுள்ள நாடுகளின் தேவைகளைத் திறமையுடன் நிறைவேற்றுவதில் ஐ. நா. நிறுவனங்கள் அனைத்தையும் ஈடுபடுத்துமாறு 1965இல் தொழில் நுட்ப உதவியின் விரிந்த திட்டம், தனி நிதி ஆகிய இரு ஐ. நா. வளர்ச்சித் துறைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன. அதன் விளைவே ஐ. நா. வளர்ச்சித் திட்டம். முதலீட்டுக்கு முன் உதவியும் தொழில் நுட்ப ஒத்துழைப்பும் அளிப்பதில் இதுவே மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனமாகும். பெருமளவில் முதலீடு செய்வதற்கு இது வழி வகுக்கின்றது. 4·3 கோடி டாலர் செலவில் திட்டமிடப்பெற்ற 37 திட்டங்களுக்கு இது 190 கோடி டாலர் முதலீடு வழங்கியுள்ளது.

Photo © Afrique Photo, Paris

கமான 12,000 இலட்சம் டாலர்களுடன் இதை ஒப்பிடுகையில் இது மட்டாகவேயுள்ளது. ஆனால், சில நாடுகளுக்கு இது இன்னலை உண்டாக்கலாம் என்பதை நாம் அறிந்துள்ளோம். எனினும், இதனினுங் குறைந்தளவு உதவியால் நாம் அனைவரும் எதிர்நோக்கும் பன்னாட்டு வளர்ச்சிக் குறியிலக்கை அடைய முடியாது என்று உறுதியாக நம்புகிறோம்.

அதிக உதவி இருந்தால் மட்டும் போதாது; அது அமைப்பிலும் ஆட்சியிலும் திறனுடையதாக இருத்தல் வேண்டும்; நன்கு வகுக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களின் தேவைகளுக்குகந்ததாக இருக்கவேண்டும். திட்டமொன்றைக் குறித்த நிதியுதவி, குறிக்காத நிதியுதவி இரண்டுக்கும் இது பொருந்தும்.

நிர்வாக, பொருளாதாரக் குறைபாடுகளால் விளையும் சிக்கல்கள் உதவி பெறும் நாடுகளைத் தாக்காது இருக்க வேண்டும். உதவி நிதியைப் பயன்படுத்தத் தேவையான அறிவும் திறனும் அளிக்கும் தொழில் நுட்ப உதவியும் நிதி உதவியோடு சேர வேண்டும். இத்தன்மை பற்றி எங்கள் அறிக்கையில் பல பரிந்துரைகள் உள்ளன. அவற்றின் முக்கியத்துவத்தை முன்னுறுத்துவது தேவையில்லாதது.

அரசுவழி உதவியை அழுத்திக்கூறுவதால் தனியார் வழி உதவியைக் குறைத்தெண்ணுவதாகாது. அயல் நாட்டுத் தனியார் முதலீடும் அத்துடன் செய்திறம் அளிப்பதும் முக்கியமானவை, ஊக்குவிக்கப்படவேண்யவை, என நினைக்கிறோம். முதலீடு செய்யும் அயலார், நலன் உதவி பெறும் நாட்டின் நலன் இரண்டிற்கும் ஏற்ப சூழ்நிலை சீராக வேண்டுமென நாங்கள் பரிந்துரை செய்துள்ளோம்.

வளர்ச்சிக்கு வாணிபம் உயிர்நாடியானது என்பதை எங்கள் அறிக்கை எடுத்துக்கூறும். விரைவான நாடுகளிடை வளர்ச்சிக்கு உலக வாணிபத்தின் இடையறாப் பெருக்கம் இன்றியமையாதது. வளர்ச்சியுறும் நாடுகள் வெளிநாடுகளோடு போட்டியிடுதல் வேண்டும்; வளர்ச்சியுற்ற நாடுகளும் வாணிபக் கொள்கைகளைச் சீராக்கி வளரும் நாடுகளின் வாணிபப் பெருக்கத் தடைகளை அகற்றல் வேண்டும்.

நான் வழங்கியுள்ள கருத்துக்கள், வேறோர் முயற்சியின் வெற்றியைச் சார்ந்துள்ளன; அஃதாவது, மக்கட்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதாகும். இந்த வளர்ச்சி, பிறப்புவீதம் ஏறியதால் ஏற்படுவதன்று; இறப்புவீதம் குறைந்ததால் விளைவதாகும். எல்லா முன்னேற்றங்களையும் தடுப்பதாக அச்சுறுத்தும் மக்கட் தொகைப் பெருக்கத்தின் விரைவைக் கணிசமாகப் பலநாடுகளிலும் கட்டுப்படுத்தினாலன்றி குறைந்த வருவாயுடைய நாடுகளின் வளர்ச்சிக்காக நாம் செய்யும் எதுவும் நிலைத்திருக்காது என்பது நன்கு தெளிவாகிறது.

அண்மைக் காலத்தில் அதிக வெளிப்படையாக எங்கும் பேசப்பட்டாலும், மக்கட்தொகை என்பது ஆய்வுரைக்கு எளிய பொருளல்ல. அது குடும்பத்தையும் நாட்டையும் பொறுத்த முடிவாகும். வெளி அதிகாரம் இதில் தலையிடக்கூடாது என்பது எங்கள் கருத்து. இத்துறையில் பெற்ற சாதனைகளை உதவியளிக்கும் நாடுகள் புறக்கணிப்பதற்கில்லை. இது வளர்ச்சிக்கான முயற்சிக்கும் உலக முழுமைக்குமே முக்கியமானதாகும்.

பொருளாதார, சமுதாய முன்னேற்றமே நாளடைவில் மக்கட்தொகை வளர்ச்சியை நிலைப்படுத்தும் சிறந்தவழி என்பதையறிவோம். ஆனால், இனியும், இப்பிரச்னையை விட்டுப் பிடிப்பதற்கில்லை. மக்கட்தொகையில் திடீர்ப்பெருக்கம் இருப்பதால் உடனடியான நடவடிக்கை வேண்டியிருக்கிறது. வளர்ச்சியுறும் நாடுகளில் வலுப்பெற்றுவரும் குடும்பக் கட்டுப்பாடு வாயிலாக, வரப்போகும் ஆண்டுகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாடு அதிக வேகம் பெறும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

இவை, நமது அறிக்கையின் சில அடிப்படைக் கருத்துக்கள். இந்த நூற்றாண்டுக்குள், குறைந்த வருமான நாடுகள் தன்னூட்ட வளர்ச்சி பெறும் குறிக்கோளையும், உண்மையான கூட்டாண்மை அடிப்படையில் உதவி அளிக்கும் கூட்டுறவுச் கொள்கையையும் சீர்தூக்கிப் பார்க்க எங்கள் அறிக்கையில் முயன்றுள்ளோம். உலகச் சமூகம் சீராக வளர்ச்சி பெறும் சிறப்பினை உணர்ந்து, அதனால் வரும் எதிர்கால ஏற்றத்தைக் காணுவோர்க்கு எங்கள் அறிக்கையில் கூறப்பட்ட உடனடி நடவடிக்கைகள் உரமற்றவையாகத் தோன்றலாம். ஏனெனில், அவர்கள் இன்றைய நடைமுறைச் சிக்கல்களை ஆய்ந்துணராதவர்கள்.

எங்கள் கணிப்பை ஏற்காதவர்கள் நாங்கள் கூறியுள்ள நடவடிக்கைகளை நடைமுறைக்கொவ்வாதவையாக, தேவையற்றவையாகக் கொள்ளலாம். எங்கள் பரிந்துரைகள் செயல்முறைக்கேற்றவை என நாங்கள் நம்புகிறோம். ஆனால், வளர்ச்சி என்ற ஏற்றத்தின் இரு சாராரும் இதில் முனைந்து நிற்க வேண்டும். இவ்வாறு முனைந்து நிற்பது எவ்வளவு அரிது என்பதை நாங்கள் அறிவோம்.

எங்களுடைய ஆய்வுகளும் அறிக்கைகளும் புது உண்மைகளை வெளிப்படுத்துகின்றன என்று நாங்கள்எண்ணி இறுமாப்புக் கொள்ளவில்லை. எங்கள் நம்பிக்கை மிதமானது. எங்கள் முடிவுகளை உலக நாடுகள் ஆய்ந்து, அப்பொருள்பற்றி மறு ஆய்வு செய்யலாம். திரு. மக்நமாராவின் கூற்றுப்படி, ''புரட்சிகரமான தொழில் நுட்ப மாறுதல் யுகத்தில் மனித வளர்ச்சி

ஒழுங்கமைவு பெற வேண்டும். இதையே, இந்நூற்றாண்டின் எதிர் நிற்கும் பெரும் கடமைப்பொறுப்பு என்று வரலாறு கூறுமென நான் நம்புகிறேன். இப் பொறுப்பில் கவனம் செலுத்தும் அரசுகளிடையேயும், பன்னாட்டு நிறுவனங்களிடையேயும் எல்லாவகையான தனியார்துறை, பொதுத்துறை ஆகிய அமைப்புகளிடையேயும், இச்சிக்கல்கள்பற்றி கலந்துரைகளும் விவாதங்களும் எழலாம். உடனடியான நடவடிக்கைகள் தோன்றலாம்.''

வங்கியின் வேலைகுறித்த பரிந்துரைகளைப் பகுத்தாய்வதாகவும், இந்தப் பகுத்தாய்வுகளை வங்கியின் இயக்குநர்களுக்கு உரித்தான செயல்களுக்குரிய பரிந்துரைகளோடு அனுப்புவதாகவும் கூறிய திரு. மக்நமாராவின் உறுதிமொழி நம்மை ஊக்கப்படுத்துகிறது. கொள்கைகளையும், செயல்களையும் எதிர்ப்பதை விடப் மக்கள் புறக்கணிப்பதையே நாம் காணுகிறோம். இது நாடுகளிடை வளர்ச்சிக்குப் பெரிய முட்டுக்கட்டையாகும். இந்தப் புறக்கணிப்பு அல்லது குறைந்த ஆதரவு நம்மை எதிர்நோக்கியுள்ள அறைகூவலை ஏற்று வெற்றிபெறப் போதுமானதன்று. இதை நல்லெண்ணமுடைய ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளும் காலம் வந்துவிட்டது. போர், உணவு, விண் வெளி இவற்றின் சூழுறவிலும், பொருளாதார வளர்ச்சி உதவிக்கு மிகுதியான முக்கியநிலை அளிக்கப்பட வேண்டும். உலக வளர்ச்சியில் உள்ள மேடுபள்ளங்களால் எழும் முக்கியமான; கடினமான சிக்கல்களை நேர்மையுடனும் ஆற்றலுடனும் எதிர்த்து வளர்ச்சியுற்ற நாடுகளும் வளர்ச்சியுறும் நாடுகளும் வெற்றிபெறவேண்டும். இதைத் தவிர்ப்பதற்கு வரலாறு இடங்கொடுக்காது.

''கண்ணியத்துடனும் தன்மானத்துடனும் மக்கள் வாழும் உலக சமூகம்'' என்ற காட்சியைக் கருத்திற் கொண்டு இன்றைய அமைப்பை மாற்றும் செயலில் இறங்க வேண்டும். அப்பொழுதுதான், தொழில் நுட்ப சமுதாய முன்னேற்றத்தின் பயனை இல்லாதாரும் ஏலாதாரும் நுகர்தல் முடியும். இக்குறிக்கோளைக் கொள்ளாதார் 25 ஆண்டுகள் கழித்து உலகம் எவ்வாறு இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கலாம். உடையார்—இல்லார், வளர்ச்சியுற்ற சமுதாயம்—பின்தங்கிய சமுதாயம், என்ற பிளவுகள் விரிந்து நின்றால் உலகத்தின் நிலை எவ்வாறாகும் என்பதைச் சிந்திக்க வேண்டும். நாம் ஒன்றுபட்டு உழைத்தால்தான் இந்நிலையைத் தடுக்க முடியும். இன்று, செயலாற்றத் தவறுவதால் நாளை தவறாது நிகழும் துன்ப விளைவுகளைக் கருத்திற் கொண்டு, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எண்ணத்தில் திண்ணமாகக் கொள்வோமாக.

தமிழில்: மா. சண்முக சுப்பிரமணியம்

Photo © J. L. Nou, Livry-Gargan, France

திட்டத்தின் சுருக்கம்

பன்னாட்டு வளர்ச்சிபற்றி பியர்சன் அறிக்கை தரும் 30 முக்கிய இலக்குகளும் பரிந்துரைகளும் :

வணிகத் துறையில்

- பன்னாட்டு வளர்ச்சிக்காக உலக வாணிகம் விரைந்து பெருகவேண்டும். இதற்கு வளர்ச்சியுறும் நாடுகளில் புறநோக்கும் போட்டி மனப்பான்மையும் தேவை.

- வளர்ச்சியுறும் நாடுகளில் மட்டும் உற்பத்தியாகும் மூலப் பொருள்களின் மேல் வளர்ச்சியுற்ற நாடுகள் இறக்குமதி வரியோ, பளுவான ஆயத் தீர்வையோ விதிக்கக் கூடாது. வளர்ச்சியுற்ற நாடுகளிலும் உற்பத்தியாகக் கூடிய விவசாயப் பொருள்களை விற்பதில் வளர்ச்சியுறும் நாடுகளுக்கு வாணிக வசதிகள் அளிக்க வேண்டும்.

- ஏற்றுமதி வருவாய் குறைந்த ஏழை நாடுகளுக்குப் பண உதவி அளிக்க வேண்டும்.

- 1970க்குப் பிறகு, வளர்ச்சியுறும் நாடுகளிலிருந்து ஆக்கப் பொருள் இறக்குமதியாவதைத் தடைசெய்யக்கூடாது. வளர்ச்சியுறும் நாடுகளுக்கிடையேயும் வாணிகம் பெருக வேண்டும். இதற்கு ஏற்றுமதி இறக்குமதி வரிகளைக் குறைக்கலாம்.

- மண்டல வளர்ச்சி வங்கிகளை நன்கு ஆதரிக்க வேண்டும். அவை வளர்ச்சியுறும் நாடுகளுக்கு ஏற்றுமதிக் கடன் வழங்க வேண்டும்.

- வளர்ச்சியுறும் நாடுகளிடையே வாணிகத்தை வளர்ப்பதற்காகப் பன்னாட்டு நிறுவனங்கள் பணம் செலுத்தும் வகைகளை ஆய்ந்து, நாடுகளிடையே பற்பல ஏற்றுமதி இறக்குமதி சலுகைகள் ஏற்படவும் வழி வகுக்க வேண்டும்.

- விலையைக் கட்டுப்படுத்தவும் பற்றுக் குறையைத் தவிர்க்கவும் தானியங்களைச் சேர்த்து வைக்கப் பணவுதவி தேவை.

வெளிநாட்டு முதலீடு

- வளர்ச்சியுறும் நாடுகள் வெளிநாட்டு முதலீட்டைத் தடுக்கும் தடைகளை நீக்கி, நிருவாகத்திற்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குமுள்ள தொடர்புகளை நிலைப்படுத்திச் சீர்படுத்தவேண்டும்.

- வெளிநாட்டு முதலீடு செய்வோரும் வளர்ச்சியுறும் நாடுகளில் தொழிலாளர் பயிற்சிக்கும் தொழில், பொருளாதார வளர்ச்சிக்கும் துணை செய்யவேண்டும்.

- வளர்ச்சியுறும் நாடுகள் வெளிநாட்டு முதலீடு செய்வோருக்கு அளவு கடந்த பாதுகாப்பும் வரிச் சலுகைகளும் வழங்கலாகாது.

- பன்னாட்டு நிறுவனங்களும் கடனளிக்கும் நாடுகளும், வளர்ச்சியுறும் நாடுகள் மட்டுமீறிக் கடன் வாங்கும்போது ''உரிய காலத்தில் எச்சரிக்கை'' செய்யவேண்டும்.

- வெளிநாட்டு அரசாங்க முதலீட்டுக்குப் பதிலாகத் தனியாரின் முதலீட்டை மட்டும் பயன்படுத்த முடியாது. தனியார் முதலீட்டுக்கு முன் சாலைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் கட்ட அரசாங்க முதலீடு தேவை.

பொருளாதார வளர்ச்சி

- வளர்ச்சியுறும் நாடுகள் தொடர்ந்து வளர்ச்சியடையத் துணை செய்வதே உதவியை அதிகரிப்பதன் நோக்கமாக இருக்கவேண்டும். 1970 லிருந்து நாட்டின் மொத்த ஆக்கத்தை ஆண்டுக்கு 6% உயர்த்த வேண்டும். இந்நிலையை அடையும் நாடுகள் இந்நூற்றாண்டின் இறுதிக்குள் தம்மையே நம்பி வாழும் நிலை ஏற்பட வேண்டும்.

- உதவி பெறும் நாடுகளின் பொருளாதார நோக்கங்களுக்கும், வளர்ச்சி நிலைக்கு மேற்ப வருங்காலத்தில் உதவி பெருக வேண்டும். ஏழை நாடுகளும் செல்வ நாடுகளின் ஆதரவை எதிர்பார்க்கும் உரிமை பெற வேண்டும்.

உதவியின் அளவு

- செல்வ நாடுகள் தமது மொத்த ஆக்கத்தில் 1% வெளிநாட்டு உதவியாக வழங்கவேண்டுமென்ற ஐ. நா. குறிக்கோள் 1975க்குள்ளாக நிறைவுறவேண்டும். கொடையாகவோ, வட்டி குறைந்த அல்லது வட்டியில்லாத கடனாகவோ வழங்கப் பெறும் அரசாங்க உதவி 1975க்குள், அல்லது 1980க்குள்ளாகவாவது நாட்டின் மொத்த ஆக்கத்தில் 0.70 சதவீதமாக இருக்க வேண்டும்.

- வளர்ச்சியுறும் நாடுகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவுபெறத் தொடங்கியதும் உணவு உதவிக்குப் பதிலாக பிற திட்டங்கள் வகுக்கப் பெறவேண்டும்.

கடன் தணிப்பு

- கடன் தணிப்பை முறையான உதவியெனக் கருத வேண்டும். வருங்கால கடன் நெருக்கடியைத் தவிர்க்க, உதவியளிக்கும் நாடுகள் ஒரேவிதமான சலுகை விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

உதவி நிருவாகம்

- உதவியளிக்கும், உதவி பெறும் நாடுகள் கலந்து பேசி நிருவாகத் தடங்கல்களை நீக்கி, ஆண்டுத் திட்டங்களுக்குப் பதிலாக 3 ஆண்டுத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

- உதவியளிக்கும் நாடுகள் தம்மிடம் உதவி பெறும் வளர்ச்சியுறும் நாடுகளைத் தம் பொருள்களை வாங்க வற்புறுத்துலாகாது. உதவிப் பணம் வளர்ச்சியுறும் பிற நாடுகளில் பொருள்களை வாங்குவதற்குப் பயன்படுமாறு செய்ய வேண்டும்.

தொழில் நுட்ப உதவி

- கடந்த 10 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி ஆண்டுக்கு 10 சதவீதத்துக்கும் மிகுதியாக இருந்ததால் இவ்வகை உதவியில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவ்வுதவியினுல் வளர்ச்சியுறும் நாடுகளின்தேவைகளை, குறிப்பாக பயிர்த் தொழிலும் கல்வியிலும் நிறைவேற்ற முடியவில்லை. இது முதலீட்டுடன் ஒன்ருக இணைக்கப் பெறவுமில்லை.

- தொழில் நுட்ப உதவியளிக்கும் நாட்டு, பன்னாட்டுக் குழுக்கள் உதவி வழங்கும் நாடுகளிடமிருந்தும் தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்தும் உதவி பெற்றுச் செவ்வனே பணியாற்ற வேண்டும்.

மக்கள் தொகை கட்டுப்பாடு

- குடும்பக் கட்டுப்பாட்டின் பயனை அனைவரும் பெறவேண்டும். தேவையற்ற குழந்தை பிறக்கக்கூடாது. உதவித் திட்டங்களை வகுக்கும் போது உதவியளிக்கும், உதவி பெறும் நாடுகள் பிறப்பு வீதக் குறைப்பை வலியுறுத்தவேண்டும்.

- பற்பல ஐ. நா. நிறுவனங்களில் மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்களை இயக்க ஐ. நா. ஓர் ஆணையாளரை நியமிக்க வேண்டும்.

- இத்துறையில் ஆய்வு வளங்களைப் பயன்படுத்த உலக வங்கி உலக சுகாதார நிறுவனத்தைக் கலந்து பன்னாட்டுத் திட்டமொன்றைத்தொடங்க வேண்டும்.

கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் உதவி

- வளர்ச்சியுறும் நாடுகள் விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவை ஏற்று, தழுவி, வளர்க்கும் திறமையை வளர்க்குமாறு கல்வி ஆராய்ச்சிக்கெனவும், கற்பிக்கும் முறைகளில் செயலாய்வுக்கெனவும் மிகுதியான பணம் செலவிடப் பெறவேண்டும்.

- தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் செலவிடப்படும் தொகையில் ஒரு பகுதியை வளர்ச்சியுறும் நாடுகளின் சிக்கல்களைத் தீர்க்கப் பயன்படுத்த வேண்டும். வெப்ப மண்டல விவசாயம், வளர்ச்சி முறைகள், கல்வி, நகர அமைப்புப் போன்ற துறைகளில் ஆய்வு நடத்த பன்னாட்டு, மண்டல நிலையங்களை அமைப்பதற்குச் செல்வ நாடுகள் துணை செய்யவேண்டும்.

பல பக்க உதவி

- பொருளாதார உதவியை உண்மையிலேயே பன்னாட்டு முயற்சியாக்க பன்னாட்டு நிறுவனங்கள் பெருமளவில் வழிகாட்ட வேண்டும்.

- 1975க்குள்ளாக பல பக்க உதவியானது இன்றைய அரசாங்க உதவி 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயரவேண்டும். உலக வங்கியின் எளிதான கடன் வழங்கும் நிறுவனமாகிய பன்னாட்டு வளர்ச்சிக் குழு பல பக்க உதவி முயற்சியில் சிறப்பிடம் பெறவேண்டும்.

- பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் இப்போது நாடுகள் அளிக்கும் 40 கோடி டாலரை 1975க்குள் 150 கோடி டாலராக உயர்த்த வேண்டும். மண்டல வளர்ச்சி வங்கிகளும் மிகுதியான ஆதரவு பெறவேண்டும்.

- ஐ. நா. வைச் சார்ந்தனவும் பிறவுமான பன்னாட்டு, பலபக்க, இரு பக்க நிறுவனங்களின் முயற்சிகளை இணைத்து, அதனால் ஒருங்கிணைந்த பன்னாட்டு உதவித் திட்டத்தை உருவாக்குவதற்காக உலக வங்கியின் தலைவர் 1970இல் ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டும்.

காற்றின் ஆற்றலை வேறினால் வெல்லல்

Photos © Bachofen, Geneva

UNESCO

1970
பன்னாட்டுக் கல்வி ஆண்டு

யுனெஸ்கோ, பொது இயக்குநர் திரு. ரெனே மேகுவின் செய்தி

இப்புத்தாண்டின் தொடக்கத்திலே, யுனெஸ்கோவின் அறிவுரைக் கேற்ப ஐ. நா. வின் பொதுப் பேரவை 1970ஐப் பன்னாட்டுக் கல்வி ஆண்டாகக் குறிப்பிட்டுள்ளதை உலக நாடுகளுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன். இவ்வாண்டைக் கல்வியின் தரத்தையும் அளவையும் உயர்த்தும் ஆண்டாகச் செய்வதற்கு தம்மாலான முயற்சி எடுக்கவும் அவற்றைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பல நாடுகளில் கல்வி முறைக்கும் பாடத் திட்டத்திற்கும் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. கருத்து முரண்பாடுகளும் உணர்ச்சிகளும் நாள்டைவில் மறைந்து விடும் என வீணே கருதாமல், நெருக்கடியின் தன்மையை உணர்ந்து அதைத் தீர்க்கத் துணிவுடன் நாம் முயல வேண்டும். மேலும் இந் நெருக்கடி பெரும் சீர் குலைவை விளைவிக்கும் என்று, எண்ணாமல், இன்றியமையாத ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் எனக் கருத வேண்டும்.

நாம் வாழும், உலகம் நமது கண் முன்னே மாறி வருகின்றது. அதில் மக்கள் தொகை பெருக்கம், குடியேற்ற நாட்டு முறையின் நலிவு, தொழில் நுட்ப வளர்ச்சியினுல் விளையும் பெரும் பொருளாதார, சமூக மாற்றங்கள் போன்றவை கல்வியை மக்கள் அனைவருக்கும் பொது வாக்குகின்றன. அதே நேரத்தில் விரைவான அறிவியல் முன்னேற்றத்தினுல் நாளடைவில் அறிவு வழக்கிறந்து போகிறது. சமூகத் தொடர்புக் கருவிகளும் ஒலிப்படக் கல்வியும் மரபான செய்திப் போக்குவரத்து முறைகளில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. ஆயினும் கடந்த காலத்தில் நடந்ததைப் போல், ஏற்கெனவே திட்டமிடப் பெற்ற அமைப்புக்கும் தேவைகளுக்கும் கருத்துகளுக்குமேற்ப வருங்காலச் சமூகத் தலைவர்களை உருவாக்குவதற்கோ, இளைஞர்களை ஒருவகையான வாழ்க்கை முறைக்குத் தகுதியாக்குவதற்கோ மட்டும் கல்வியைப் பயன்படுத்த முடியாது. இனி கல்வி ஒரு சிலரது உரிமையாகவோ ஒரு குறிப்பிட்ட வயதில் படிக்கும் பாடங்களாகவோ இராது. அது சமூகம் முழுவதையும், தனிமனிதனது வாழ்க்கையை முற்றிலும் தழுவத் தொடங்கி விட்டது. ஆகவே அது தொடர்ந்து நடைபெற்று எங்கும் நிறைந்து நிலவ வேண்டும். இனி கல்வியை வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் முறையாகக் கருதாமல் வாழ்க்கை முழுவதையும் தழுவியதாகக் கொள்ள வேண்டும். தொடர்ந்து அறிவைப் பெற்று இடையருது, கருத்துக்களை திரும்பத் திரும்ப ஆய்ந்து பார்த்தல் அதன் இயல்பாக வேண்டும்.

ஆனுல் கல்வியானது தனது உள்ளமைப்பில் பிளவுபட்டு வாழ்க்கையுடனும் சமூகத்துடனும் தொடர்பின்றி இருக்குமானுல் அஃது எவ்வாறு விரிந்து பரவக் கூடும்? கல்விமுறையின் பற்பல கூறுகள் நன்ருக இணைக்கப் பெருமலிருப்பதுடன், இன்னும் கல்விக்கும் மனித நடவடிக்கைகளுக்கும் பெரும்பாலும் தொடர்பு இருப்பதில்லை. பலமுறை பள்ளியும் கல்லூரியும் பல்கலைக் கழகமும் சமுதாயத்துடன் இணைந்திருப்பதற்குப் பதிலாக தனித்து நிற்கின்றன.

எடுத்துக் காட்டாக மின்மப் பொறியாளர் ஒருவர், தற்கால அறிவு பெற விழையும் தமது நண்பர்களுக்கும் துணைவர்களுக்கும் அயலாருக்கும் தமது அறிவைப் பகிர்ந்தளிக்கப் போதிய வாய்ப்புப் பெறுவதில்லை. கல்வி நிலையங்கள் ஓராண்டில் 200 நாட்களே, அதுவும் ஒரு நாளில் 8 மணி நேரமே பயன்படுகின்றன. இளைஞர்கள் பள்ளியிலோ

பல்கலைக் கழகத்திலோ ஏதோ ஒரு தேர்வில் தேருததனுல், தாம் பெற்ற திறமையை ஒரு தொழிலில் பயன்படுத்த முடிவதில்லை. இவை யெல்லாம் பொருள் வளத்தையும் மனிதனின் உள்ளார்ந்த ஆற்றலையும் வீணுக்குவதாகும். இதை எந்த நாடும், குறிப்பாக வளர்ச்சியுறும் நாடுகள் பொறுத்திருக்க முடியாது.

இந்நாடுகளைப் பற்றி நான் குறிப்பிடும்போது, மனித ஆற்றல் வீணு வதற்கு இழிந்த எடுத்துக் காட்டாக இருக்கும் எழுத்தறிவின்மையை எவ்வாறு குறிப்பிடாமலிருக்க முடியும்? இன்றும் எழுத்தறிவின்மை மனித இனத்தில் மூன்றில் ஒரு பகுதியை செயலிழந்த நிலையில், தற்கால நாகரிகத்தைப் பெற முடியாத நிலையில் தாழ்த்தி வைத்துள்ளது. இக் கொடுமையை உலகிலிருந்து ஒழிக்க எப்போது நாம் முன் வருவோம்?

இந்த பன்னுட்டுக் கல்வி ஆண்டில் இத்தகைய பிரச்னைகளை ஆய உலக சமுதாயம் முயல வேண்டும். அப்போதுதான் புதிய, துணி வான முறைகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தலாம். சமூகம் முழு வதையும் தழுவி வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் கல்வியைப் பற்றி மேலே குறிப்பிட்டேன். அதைப்பற்றி சிந்தித்து அதைச் செயலாற்ற வேண்டு மென யுனெஸ்கோ அரசாங்கங்களையும் நிலையங்களையும் தனி மனிதரை யும் கேட்டுக் கொள்கிறது. வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் கல்வி என்பது வெறும் சொல்லோடு மறைந்து போகாதிருக்க வேண்டுமெனில், அமைப்பிலும் அறிவாற்றலிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட வேண்டு மென்பதை எவரும் மறுக்க முடியாது. இதற்கு பள்ளி, பல்கலைக் கழக கல்வியை பள்ளிக்குப் புறம்பான கல்வியுடனும் முதியோர் கல்வி யுடனும் ஒருங்கிணைக்க வேண்டும். இவ்விரு பிரிவுகளும் இன்று முக்கிய மில்லாதவையாகவே கருதப்படுகின்றன. முழு நோக்குடன் பார்த்தால் இவை மனித உள்ளத்தை வளர்த்து அதற்குப் பன்னேக்கு அளிப்பதில் முக்கிய பங்கு பெறுகின்றன என்பது தெளிவாகின்றது. இவையெல்லா வற்றையும் ஒரே ஆண்டில் அடைய முடியுமென யாரும் நினைப்பதில்லை. ஆயினும் மனித இனத்தின் எதிர்காலப் பாதையாகிய இவ்வழியில் நாம் அனைவரும் துணிந்து செல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது.

எப்போதும் சமூகத்திலும் நாகரிகத்திலும் பெரும் மாறுதல்கள் ஏற்படும் போதே கல்வியிலும் நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

வரலாற்றில் அத்தகைய காலத்தை நாம் அண்மிக் கொண்டிருக்கிறோம் என நினைக்கிறேன். சமூகத்திற்கும் தனி மனிதருக்கு முரிய புதிய மனித உருப்படிவங்கள் தேவையென்பதை எங்கும் மக்கள் உணர்கின்றனர். கல்வியினால் மட்டும் அவற்றை உண்டு பண்ண முடியாதெனினும், கல்வியின்றி அவற்றை உருவாக்க முடியாது என்பது நமக்குத் தெரியும். ஏனெனில், கல்வியில் தோன்றிப் பிரதிபலிக்கும் முன்னேற்றமே உண்மையான பொருள் நிறைந்த முன்னேற்றமாகும்.

ஆகவே, முன்னேற்றத்தையும் புத்துயிரையும் ஒவ்வொரு மனிதனும் பெற வேண்டிய கல்வி உரிமையின் பெயரால் இந்த பன்னாட்டுக் கல்வி ஆண்டைத் தொடங்கி, வெற்றி தரக்கூடிய வகையில் தாராள மனத்துடன் உழைக்குமாறு மக்களையும், அன்பு நோக்குடன் ஒத்துழைக்குமாறு அரசுகளையும் பணிவுடன் வேண்டுகிறேன்.



மண் ஆழமின்றி, காற்றும் நீரும் அரிக்கும் நிலையிலுள்ள பகுதிகளில் மர வேர்கள் நட்புக் கரங்கள்போல் மேல் மண்ணைக் காத்து உறுதிப்படுத்துகின்றன. காடுகள் அழிக்கப்படும் இடங்களில் வனப்பிழந்த நிலத்தையே காணலாம். அல்ஜீரியாவில் இது நூற்றுண்டுகளாக நிகழ்ந்து வருகிறது. இதனுல் பயிர்த் தொழிலும், வெள்ளம் அடித்து வரும் வண்டல் படியும் அணைகளும் சேதமுறுகின்றன. சாகுபடி நிலத்திற்கேற்படும் இந்த அழிவைத் தடுக்க அல்ஜீரியா உணவு, விவசாய நிறுவனத் துணையுடன் காடு வளர்ப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன்படி இளைஞர்கள் மறைந்த காடுகளைத் திரும்ப வளர்க்கத் துணை புரிவர். மேலே: அல்ஜீரியாவில் பாட்ரா அருகில் நிலத்தை உழுகின்றனர். இங்கு புதி காடுகள் வளர்க்கப்படும். இடப்புறம்: அரிக்கப்பட்ட வறண்ட நிலத்தின் ஓரத்தில் புதிதாக நடப்பெற்ற மர வரிசைகள். வலப்புறம்: நாற்றுப் பண்ணை. இங்கு காடு வளர்ப்புத் திட்டத்திற்கென ஆயிரக் கணக்கான தேவதாரு, யூகலிப்டஸ் இளஞ்-செடிகள் வளர்க்கப்படுகின்றன.

மூன்றாவது உலகின் மாறிவரும் தோற்றம்

கலாச்சாரம், பொருளாதார நிலை மற்றும் சமூக அரசியல் அமைப்புக்களில் வேறுபட்டிருந்தாலும், குறைந்த பண வருவாய் கொண்ட ஏறக்குறைய நூறு நாடுகளைக் குறிக்கவே, ''குறைவான வளர்ச்சி பெற்ற நாடுகள்'' என்னும் சொற்றொடர் பயன்படுத்தப் படுகின்றது. எனவே அந்நாடுகளின் ஏராளமான வேறுபாடுகளைக் கணக்கிலெடுத்து அறிந்து கொள்வது, அவைகளின் வளர்ச்சி குறித்த முதல் அக்கறையாகும். எடுத்துக்காட்டாக:

● 53 கோடி மக்கட் தொகை கொண்ட இந்தியா, 3 கோடி கொண்ட தென்கொரியா, 15 இலட்சங் கொண்ட கோஸ்டா ரிக்கா, இன்னும் 5 இலட்சமே கொண்ட கேபன் ஆகியவை குறைந்த வருவாயுள்ள நாடுகளில் சேரும். எந்த ஒரு ஐரோப்பிய நாட்டை விடவும் அதிக மக்கட் தொகை கொண்ட மிகப் பெரிய நாடான இந்தியாவில் 17 மாநிலங்கள் உள; இலண்டனின் தனியொரு மாவட்டத்தை விடவும் குறைவான மக்கட் தொகை கொண்டது கேபன். நாடு, அளவில் பெரியதாய் இருந்தாலே, நிருவாகச் சிக்கல்கள் மற்றும் அரசியலோடு ஒட்டிணைந்த பிரச்னைகள் பின்னிக் கிடக்கும்; பெரிய சந்தைகள் அளவுக்கேற்ற பொருளாதார நிருவாகம் போன்றவையும் எழும். ஆனால் சிறிய நாடுகளோ, இதற்கு அநேகமாக முற்றிலும் மாறுபட்ட ஒரு தோற்றத்தைக் காட்டும். அளவுக்குட்பட்ட சந்தைகள்—திறமைக் குறைவு—பேரம் பேசும் சக்திக் குறைவு ஆகியவற்றைச் சுற்றியே சிறிய நாடுகளின் பிரச்னைகள் இருக்கும்.

● வளர்ந்து வரும் அநேக நாடுகளில் மக்கட் தொகை வேகமாகப் பெருகிக் கொண்டு வருகிறது. ஆனால், சமூகப் பொருளாதாரச் சிக்கல்களில் பெருத்த வேறுபாடுகளிருக்கின்றன. அதாவது, கிழக்கு பாகிஸ்தானைப் போல சதுர மைலுக்கு 1,200 பேர்கள் இருக்கிற இடத்திலுள்ள பிரச்னைகளுக்கும், பிரேசிலைப் போல சதுரமைலுக்கு 26 பேர்களே உள்ள இடத்தின் பிரச்னைகளுக்கும் இடையே பெருத்த வேறுபாடுகள் உள்ளன. அரும்பாடுபட்டு உருவாக்கப்படுகின்ற புதிய நிலங்களில் காணும் அதே மனநிலை, பற்றாக் குறைத் துண்டுகளாகப் பங்கு போடப்பட்டுள்ள குறிப்பிட்ட அளவுள்ள நிலங்களிலே காணப்படாது.

● முழுதும் பங்கு பெறுகிற ஒரு ஒரு கட்சி மக்களாட்சி முறையிலிருந்து சர்வாதிகார முறையீராக, வளர்ந்து வரும் நாடுகளின் அரசியல் அமைப்புக்கள் பல்வேறுபட்டவையாகும். வழக்கமாக அரசே சொந்தமாக ஏற்று நடத்துகிற—மக்களின் இன்றியமையாத் தேவைத் துறைகள் மற்றும் பெருந் தொழில்கள் நீங்கலாக, மற்றவற்றிற்கு, தனியார் துறையையே சில நாட்டுப் பொருளாதாரங்கள் பெரிதும் நம்பியிருக்கின்றன; இன்னும் சில நாடுகள் அவற்றிற்குப் பொதுத் துறையையும் பெருவாரியான நாடுகள், இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு நிலையையும் நம்புகின்றன.

அரசியலுணர்வு அதிகரிக்க, பொருளாதாரச் சக்தி வேறுபட, பாரம்பரியமான அம்சங்கள், புதிய வகை நடவடிக்கைகட்கு வழிவிட்டு வகை செய்கின்றன.

● குறைந்த வருவாயுள்ள நாடுகளில் நிலவும் மதிப்பு முறைகளுக்கிடையே உள்ள வேறுபாடானது, தொழில் மய உலகில் குறைந்த அளவிலேனும் உள்ளதைப் போன்று, பெருத்ததாகவே உள்ளது. மெக்சிகன் அல்லது இந்தியாவைப் போன்ற சில சமூகங்கள் மிகத் தொன்மை வாய்ந்தவையாக இருக்கின்றன; அண்மையில் தான் சில சமூகங்கள், குடியேற்ற ஆதிக்கத் தளையறுத்திருக்கின்றன. வேகமான தொழில் மய முன்னேற்றங்காண சில சமூகங்கள் முனைந்து நிற்கின்றன; இன்னுஞ் சில சமூகங்களோ, எந்தத் தெளிவான பொருளாதார வழியை மேற்கொள்வது என்பது குறித்து இன்னும் திட்டமே தீட்டவில்லை; மாறுபட்ட சூழலிலும் நிலைத்து நிற்கும் அரசை அமைப்பதற்காக—இன, வகுப்பு வேறுபாடுகளைச் சரி செய்வதிலேயே தமது சக்திகள் அனைத்தையுஞ் செலவிடுவதைத் தவிர்த்து, வேறு வழி காணாத சில சமூகங்களும் இருக்கின்றன. செல்வஞ் சேர்ப்பது என்ற கருத்தோ அல்லது இயந்திர மயமாக்குதல் என்னுங் கொள்கையோ உலகனைத்தையும் ஈர்க்கவுமில்லை; உலகம் முழுமைக்குமாக அவை ஏற்றுக் கொள்ளப் படுவதுமில்லை.

● வருவாயின் அளவிலும் மற்றும் பொருளாதார உட் பொருளிலும் கூட, பெருத்த மாறுபாடுகள் இருக்கின்றன. அர்ஜன்டைனாவில் தலை ஒன்றுக்கு, 780டாலருக்கும் மேலாக வருவாய் கிடைக்கிறது; இந்தியாவில் ஏறக்குறைய 90டாலருக்குக் கிடைக்கிறது; அநேக நாடுகளில் 60டாலருக்கும் குறைவாகவே வருவாய் இருக்கிறது. சில நாடுகளில், பெரும் பகுதி மக்கள் ஏதோ வயிற்றைக் கழுவிக் கொண்டால் போதும் என்கிற விளிம்பிலே வாழ, மற்ற நாடுகளில் குறைந்த அளவு அடிப்படை இன்றியமையாத் தேவைகள் நிச்சயமாகக் கிடைக்கின்றன; அல்லது, அவ்வசதிகளையும் நிச்சயமாக உருவாக்கித் தருகிற நிலையில் அந்நாடுகள் உள்ளன.

இவ்வாறே பொருளாதார அமைப்பிலும் பரந்த வேறுபாடுகள் காணக் கிடக்கின்றன. அந்நிய வர்த்தகத்தையே பெரிதும் நம்பி, பல நாடுகளின் பொருளாதாரங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் இந்தியாவைப் போன்ற சில நாடுகள், வர்த்தகத்தை ஏதோ ஓரளவுக்குத்தான் நம்பியிருக்கின்றன. ஜாம்பியா, வெனிசுலா போன்ற நாடுகளில் கனிச் சுரங்கங்கள் உள்ளன; ஹாங்காங், மெக்சிகோ போன்ற வெகுசில நாடுகள், கணிசமான தொழில் துறைகளைப் பெற்றிருக்கின்றன; ஆனால் மிகப் பெரும்பான்மையான நாடுகளோ, வேளாண்மையையே அதிக அளவில் நம்பியிருக்கின்றன.

உடைமையின் வகைகள் மற்றும் வருவாயின் பிரிவுகள் ஆகியவற்றிலுங்கூட, மேலே சொன்ன அளவுக்கிணையான, கூரிய வேறுபாடுகள் இருக்கின்றன. பொருளாதார உட்பொருள் என்று சொன்னாலே, மிகச் சரியாக மதிப்பிடுவதற்கு முடியாதுதான்; எண்ணெய் ஊற்றுக்கள் மற்றும் வாயுக் களங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன—இன்னும் பழைய உலோகங்கட்குப் புதிய உபயோக முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாஞ் சேர்ந்து, பழைய ஆரூடங்களைப் பொய்யாக்கி வருகின்றன. இப்போதுங்கூட, நமக்குத் தெரிந்த தகவலறிவின்படி, துருக்கியானது, மூலப் பொருள்களைக் கணிசமான அளவுக்கு நிறையப் பெற்றிருக்கின்றது; வெப்ப நிலை கொண்ட நாடு அது. ஆனால் சாட் அப்படியல்ல. ஒரு பெரிய வல்லரசுக்குரிய பொருளார்ந்த மூலாதாரங்கள் அனைத்தும் பெற்றிருப்பது இந்தியா. ஆனால் சில நாடுகளோ, அவை தாம் பிழைப்பதற்குத் தேவையான அடிப்படை அம்சங்களைக் கூடப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

1945-லிருந்து இலத்தீன் அமெரிக்காவின் தலா வருமானம் வளர்ந்து வந்துள்ளது. இஃது ஆப்பிரிக்காவிலும், தென் ஆசியாவிலும் வளர்ச்சி வீதத்தை விட உயர்ந்தது. மிக விரைந்து பெருகி வரும் ஆக்கத் தொழில் அப்பகுதி முழுவதிலும் ஆண்டுக்கு 67 சதவீதம் வளர்ந்துள்ளது. வலப்புறம்: கொலம்பியாவின் மிகப்பெரிய செயற்கை இழை உற்பத்தி ஆலையிலுள்ள 'நைலான்' பதனப் பொறி உற்பத்தியை 70 சதவிகிதம் உயர்த்த இவ்வாலை அண்மையில் 1·2 கோடி டாலர் செலவில் திட்டமொன்று தொடங்கியுள்ளது. வளர்ச்சியுறும் நாடுகளில் தனியார் துறையில் முதலீடு செய்யும் உலக வங்கியின் உறுப்பு நிறுவனமாகிய பன்னாட்டு நிதிக் கழகம் இத்திட்டத்திற்கென 12 இலட்சம் டாலர் தந்துள்ளது.



Photo Ray Witlin - International Finance Corporation

மூலாதாரமும் தொழில் நுட்பவியலும்

69 நாடுகளில்

தலா வருமானம்
1967

100 டாலருக்கு கீழ்

200 டாலருக்கு கீழ்

300 டாலருக்கு கீழ்

500 டாலருக்கு கீழ்

500 டாலருக்கு மேல்

Source : World Bank

இவ்வாறு வளர்ச்சிப் பிரச்னைகள் நாட்டுக்கு நாடு பரந்த அளவில் வேறுபட்டவையாகும். முந்தைய அனுபவங்களை முன் வைத்தும், காலச்சார—அரசியல் வரலாற்றைக் கொண்டும், தேசியக் குறிக்கோள்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஒருகால் இவை, ஆள்வோரின் விருப்பங்களுக்கேற்ப, சரியற்ற முறையில் வடிகட்டப்பட்டதாகவும் இருக்கக்கூடும்.

அரசாங்கங்களின் பங்கானது விரிந்து பரந்ததாகவும் இருக்கும்; அல்லது குறுகிய—குறைந்த அளவினதாகவும் இருக்கும். விரிவான அல்லது மிகக் குறைந்த அமைப்பையுஞ் சரி மற்றும் நிருவாகத் திறமையுஞ் சரி வழிவழியாக இவ்வரசுகள் பெற்றிருக்கலாம். இவ்வரசுகளைச் சேர்ந்த மக்கள் அரசியல் ரீதியாக ஒரு நிலையற்றவர்களாகவோ அல்லது தேர்ந்து முதிர்ந்தவர்களாகவோ இருக்கக்கூடும். சேமிப்புப் பழக்கமும் ஊக்கமும் பாரம்பரியமாகப் பெற்றிருக்கவும் கூடும் அல்லது இத்தகைய போக்குகளை இனிமேல்தான் உருவாக்க வேண்டிய அரசுகளாகவும் அவை இருக்கலாம்.

இந்த வேறுபாடு ஒருபுறமிருக்க, அநேகமாக ஒவ்வொரு நாட்டிலுமே பொது நோக்கம் ஒன்று எழுகின்றது. அதாவது, ஏழ்மையைக் குறைப்பது; கல்வி—ஆரோக்கியம்—குடியிருப்பு வசதி மற்றும் உணவு ஆகியவை ஒவ்வொரு குடிமகனுக்கும் குறைந்த அளவுக்கேனும் நிச்சயமாகக் கிடைக்கச் செய்வது; இயற்கையின் ஆற்றலை நாடும், தனிநபரும் தம் கைக்கீழ் அதிக அளவில் கொண்டு வருவது; விருப்பத்திற்கேற்றவாறு வாய்ப்பை விரிவாக்குவது போன்றவையே அப் பொதுவான நோக்கம் ஆகும்.

அநேக நாடுகளில், சம்பிரதாய அம்சங்கட்கும், நவீன மயமாக்கும் அம்சங்களுக்குமிடையே நிலையானதொரு போராட்டத்தின் மூலமே, வளர்ச்சி என்பதே விளைந்திருக்கின்றது.

பாரம்பரியமான வேளாண்மைப் பொருள்களுக்கு வெளி நாட்டுக் கிராக்கி சாதகமாக இருக்காதே என்னுங் கவலை, வளர்ந்து வரும் புதிய விடுதலை நாடுகட்கு மட்டுந்தான் என்பது இல்லை; அதே போல் பொருளாதாரக் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்களில், குறைந்த வருவாயுள்ள நாடுகளின் பொது நிலைத் தன்மைகளுக்கிடையேயும், அந்த அளவு ஒற்றுமை இல்லை.

அரசியல் ரீதியாக அவசியம் என்கிற வகையிலும், பொருளாதார ரீதியில் விரும்பப்படுவது என்கிற வகையிலும் இறக்குமதிக்குப் பதிலாக உதவுகிற உள்நாட்டுத் தொழிலையே அப்படிப்பட்ட அநேக நாடுகள் வலியுறுத்தி வந்தன; தேசிய திட்டமிடலுக்கும் சரி மற்றும் வருவாய்ப் புனர்ப் பங்கீட்டுக்குஞ் சரி, இன்றியமையாத அம்சமென்கிற வகையில், நேரடி அரசாங்க நடவடிக்கையையும், அரசாங்கமே, தொழிலை உடைமையாகப் பெறுவதையும் அநேக நாடுகள் நம்பி வந்தன; பொது உற்பத்தித் தன்மையில், கூடுதலுக்கான வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை அநேக நாடுகள் பொதுவாகவே மறந்தன.

பொருளாதார வளர்ச்சி என்பதைத் துவக்கத்தில், எப்போதுமே எப்படி பார்த்து வந்தார்கள் என்றால் ஏதோ சிறந்த சிலர், பெருத்த மக்கட் கூட்டத்திற்காக மேற்கொண்டு வந்த செயலாகவே கண்டு வந்தனர். மக்கள் பங்கு பெறுவது விரும்பத்தக்கதாகத் தேற்ற ரீதியில் கருதப்பட்டு வந்த இடங்களில் கூட, மக்களின் சக்திகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான தேவையை அவ்வளவு முக்கியமானதாக யாரும் கருதவில்லை. சந்தை நிலைகள், தனியார் உடைமை மற்றும் இலாபம் ஆகியவை எப்போதுமே சந்தேகிக்கப்பட்டு வந்தன. இதற்கு ஒரு பகுதி காரணம், குடியேற்ற ஆதிக்கம் பரவுவதற்கு இச்சக்திகள் துணையாக இருந்தமையே; இன்னொரு காரணம், நாட்டை ஆளவந்தவர்கள் ஒன்று இராணுவத்திலிருந்தோ அல்லது நிருவாகச் சிறப்புப் பெற்றவர்களாகவோ வந்திருந்தார்கள். வருவாயை இன்னும் சமமாகப் பங்கீடு செய்வதில் கவலை கொண்டவர்களுக்கோ, வரி விதிப்பு, பொதுத்துறைச் செலவுகள் மற்றும் பொதுவான ஊக்குவிப்பு அம்சங்கள் ஆகியவற்றை கொள்கைக் கருவிகளாகப் பயன் கொள்வதற்கான அனுபவம் கிடையாது.

துவக்க காலத்தில், திறமை மற்றும் தொழில் நுட்பத் தன்மையை மாற்றுவதற்கும் இன்னும் வணிக ரீதியான நிதி உதவி செய்வதை மாற்றுவதற்கும், தொழில் நுட்ப உதவியே போதுமானது என்று கருதிக் கொள்ளப்பட்டது. எங்கே சுலபமான கடன்களும் மானியங்களும் கிடைத்தனவோ (உதாரணமாக, அமெரிக்காவிலிருந்து), அங்கேயெல்லாங்கூட, சொல்லப்பட்டு வந்த பிரச்னையின் அளவு என்ன என்பதைப் பற்றி மிகக் குறைவாகவே புரிந்து கொள்ளப்பட்டது.

வளர்ச்சியையும் மொத்த பொருளாதாரத்திலும் மற்றும் சமூகத்திலும் அதனால் காணும் விளைவையும் புரிந்து கொள்கிற தன்மை, நாளடைவில், வளர்ந்திருக்கிறது; ஆனால் இந்தத் தலைமுறையில்தான், அதிகமாக—தேர்ந்த அளவில் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைக் கொள்கைகள் காட்டுகின்றன. இன்னுங்கூட இது முழுமை பெற்றதெனச் சொல்வதற்கில்லை.

இவ்வாறு ஒரேயடியாக உதவிகள் அனைத்தையும் மிகச் சாதாரணமாக்கியதால், தொழில்மய நாடுகளும் சரி, குறைந்த வருவாயுள்ள நாடுகளும் சரி, அந்நாடுகட்கு உதவிகள் பெருகிப் பாய்வதை அதிகமாக வலியுறுத்தி வந்தன; அத்துடன், தலை ஒன்றுக்கான மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சியையும் ஊன்றிக் கவனிக்குமாறு அந் நாடுகளைச் செய்துவிட்டது. இந்தப் பழக்கம், ஒன்றை உணர்ந்து கொள்ள மெதுவாக வழிசெய்து விடுகின்றது. அதாவது, பாய்ந்து பெருகிவரும் உதவிகளால், மொத்த தேசிய உற்பத்திக்கு உள்ளீடாக என்ன நேரும் என்பது, பெரும்பாலும், உதவிபெறும் நாடு எந்தத் திறமையை வைத்து, உள்ளூர் மூலாதாரங்கள் உபயோகப்படுத்துகிறதோ, அந்தத் திறமையைப் பொறுத்ததாகும்; அத்துடன் உதவி பெறுவது, தொடர்ந்து பின்பற்றி வருகிற மொத்தப் பொருளாதார—சமூகக் கொள்கைகளைப் பொறுத்தும் மொத்த தேசிய உற்பத்தியின் நிலையும் அளவும் அமையும்.

இந்தக் கொள்கைகளுக்கு வேறுசில குறிக்கோள்களும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, தனிப்பட்ட அல்லது பகுதி வருவாய்ப் பங்கீட்டில் சமத்

மொத்த ஆக்கத்திலும் தலா வருமானத்திலும் காணப்படும் உயர்வு

மொத்த ஆக்கத்தில் ஆண்டுச் சராசரி உயர்வு (1960 - 67)				
6%-க்குமேல்	**5-6%**	**4-5%**	**3-4%**	**3-%க்கு கீழ்**
	கினி மாலாவி பாகிஸ்தான்	எத்தியோப்பியா டான்சானியா	இந்தியா நைஜீரியா	பர்மா காங்கோ (ஜன நாயகக் குடியரசு) ஹாய்ட்டி மாலி சோமாலியா
கொரியக் குடியரசு மாரிட்டானியா தாய்லாந்து	பொலிவியா சிரியா ஐக்கிய அராபியக் குடியரசு	ஈக்வடார் கீன்யா பிலிப்பைன் தீவுகள் ஸாம்பியா	இலங்கை காங்கோ (பிராஸாவில்) மொராக்கோ சூடான் உகாண்டா	காமரூன் இந்தோனேசியா
சீனா (பார்மோசா) எல் சால்வடோர் ஈரான் ஐவரி கோஸ்ட் ஜார்டன்	ஹாண்டுராஸ் ஈராக் மலேசியா பாப்புவா, நியூகினி துருக்கி	பிரேஸில் கொலம்பியா பராகுவே	டொமினிக்கன் குடியரசு கானா லைபீரியா டுனீஷியா	அல்ஜீரியா செனகால்
நிகாரகுவா பெரு	கோஸ்டா ரீக்கா குவாட்டமாலா	காபன்	கயானா ஜமெய்க்கா	
சைப்ரஸ் கிரீஸ் இஸ்ராயேல் லிபியா மெக்ஸிகோ பனாமா ஸ்பெயின் டிரினிடாட் டொபாகோ யுகோஸ்லாவியா		சிலி லெபனான் வெனிசுலா		அர்ஜென்டினா உருகுவே

துவங் காணல், அல்லது கல்வி மற்றும் சமூகத் தொண்டுகளில் முதலீடு செய்வது போன்றவையே அக் குறிக்கோள்களாகும். சில நேரங்களில், வளர்ச்சியின் விகிதத்தைக் குறைத்துக் கொண்டே இந்த குறிக்கோள்களை அடைய வேண்டியிருக்கின்றது. சாதகமற்ற அனைத்துலக வர்த்தகம் மற்றும் நாணயக் கொள்கைகள் ஆகியவற்றால், பெருகிவரும் உதவிகள் தடைப்படலாம் அல்லது, வளர்ச்சி வரம்பிடப்படலாம் என்கிற எண்ணமும் அதிகரித்துக் கொண்டே தான் இருக்கின்றது.

இரண்டு தலைமுறைகளின் அனுபவத்தைக் கொண்டு, பழைய அணுகல் முறைகள் தற்போது மெதுவாக மாற்றப்பட்டுவருகின்றன.

பொருளாதாரம், வெளிக் கண்ணோட்டம் கொண்டதாகவே அதிக அளவில் இருக்க வேண்டும் என்பதை வளர்ந்து வரும் அநேக நாடுகள் தற்போது உணருகின்றன. ஏற்றுமதி மூலம் சம்பாதிப்பதே, அந்நியச் செலாவணியின் முக்கிய ஆதாரமாக இருக்க வேண்டுமேயன்றி, உதவிகள் மூலமாக அல்ல என்பதையும் தற்போது அவை நன்கு உணர்ந்துள்ளன.

அநேக மக்கள் ஈடுபட்டிருக்கின்ற வேளாண்மைத் துறையில் வேகமான வளர்ச்சி காண இயலும்; அவ்வாறே, உள்ளூர்த் தொழில்களுக்குக் கிராக்கியை உருவாக்கவும், தொழில்கட்குத் தேவையான மூலப் பொருள்களை வழங்குவதற்கும் இன்னும், அதிக அளவு ஏற்றுமதிக்குத் தேவையான சக்தியைத் தருவதற்குமாக, வேளாண்மைத் துறையில் வளர்ச்சியைப் பெருக்குவது என்பது அவசியம் என்பதும் மிக அதிகமாகத் தற்போது தெளிவாகியிருக்கின்றது.

அரசு உடைமை என்கிற கொள்கையை அதிக அளவில் ஏற்றுக் கொண்டிருக்கின்ற நாடுகளில் கூட, தனிப்பட்ட ஊக்குவிப்பு உணர்வும் மற்றும் முதல் முயற்சி ஆகியவற்றின் மூலமாக, மூலாதாரங்களைத் தேடுவதிலும், வழங்குவதிலும், அதிகமாகத் தற்போது கவனஞ் செலுத்தப் பட்டு வருகின்றது. அடிப்படை இன்றியமையாத வாழ்க்கை அம்சங்கள், போக்குவரத்து, இயற்கை மூலாதாரங்கள் மற்றும் ஆதாரத் தொழில்கள் ஆகியவற்றில் தனது பொதுவான விரிந்த பொறுப்புத் தன்மையைப் பொதுத் துறையானது தன்னிடத்தே தேக்கிவைத்துக் கொண்டிருக்கின்றது; ஆயினும், சமூக—அரசியல் நோக்கங்களின் ஆணைக் கட்டுப்பாடுகட்குள்ளே, சந்தையில் புகுந்து வேலை செய்யவும், இலாப ஊக்கங்களைப் பயன்படுத்திக்

கொள்ளவும், தற்போது பெருத்த விழைவு காணப்படுகின்றது.

இதற்கு மாருக, இன்றைய வளர்ந்து வரும் நாடுகளில் வளர்ச்சிக்கான ஒழுங்கு முறைகள் என்பது, தொழிற்புரட்சிக் காலத்தில் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் கண்டதற்கு முற்றிலும் வேறுபட்டவை என்பதை, தொழில் மய நாடுகள் அதிக அளவில் உணர்ந்து கொண்டு விட்டன. நகர்ப்புறத்தே கிடைக்கும் அசுத்தமான இடங்கள், குழந்தைப் பருவத்தில் வேலைக்கு வைத்துக் கொள்ளல், வசதியற்ற வேலைச் சூழல்கள், நிலையற்ற குறைந்த ஊதியங்கள் — போன்றவற்றைக் குறித்து, வெகு சிலரே கவலைப்பட்டார்கள் அப்போது. இப்போது இதற்கெலாம் அக்கறை காட்டாதவர் யார்?

அரசியல் உணர்வு காரணமாக, பொதுத் துறைச் சேவைக்கு நல்ல கிராக்கி உருவாகியிருக்கின்றது; சமத்துவ வருவாய்ப் பங்கீடு தேவை என்பதையும் அவ்வுணர்வு உருவாக்கியிருக்கின்றது. இவை இரண்டுமே, உயர்ந்த அளவு வருவாயும் உற்பத்தித் திறனும் அடைகிற வரையிலும், தொழில்மய நாடுகளில் ஏற்பட்டதில்லை.

நில நிலையும் மிகவும் வேறுபட்டதாக இருப்பதுடன், அதிகச் செலவையும் கொடுப்பதாக இருக்கின்றது. பிறப்பு மற்றும் இறப்புகளுக்கிடையே இருந்த சமநிலை திடீரென நிலைகுலைக்கப் பட்டிருப்பதுடன், மக்கட் தொகைப் பெருக்க விகிதங்களை மேலும் தூண்டி விட்டிருக்கின்றது. அதுவும், புதிய நிலங்கட்குக் குடியேறுவதை வன்மையாகக் கட்டுப்படுத்தியுங்கூட, அவ்வாறு நிகழ்ந்திருக்கின்றது.

இறுதியாக, வளர்ந்து வரும் நாடுகள் பரம்பரையாகப் பெற்றிருக்கிற வேகமான வளர்ச்சியைச் சாத்தியமாக்கியிருக்கின்ற அதே தொழில் நுட்பமானது பிரச்னைகளையும் உடன் கொண்டு வருகிறது. உதாரணமாக, மனித சக்தி பயிற்சி, அதைப் பராமரிப்பது, இன்னும் தொழிலாளி ஒருவருக்கான மிக அதிக அளவு மூலதனச் செலவு—ஆகிய அப் பிரச்னைகளைத் தொழில் மய நாடுகள் மெதுவாகத் தீர்க்க முடிந்திருக்கின்றது. தங்கள் சொந்த சமூகங்களில் எஞ்சியிருக்கிற வறுமையின் சின்னங்களை அகற்ற தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் வழி ஓரளவு தாங்கள் பெற்ற அறிவைக் கொண்டே, தொழில்மயமாக்கப்பட்ட நாடுகள், வளர்ச்சியின் சமூக-அரசியல் சிக்கலான நிலைகளைப் புரிந்து கொள்ளத் துவங்கியிருக்கின்றன.

மிக முக்கியமானது என்னவெனில், எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமான வகையில் வளர்ச்சிக்கென தனி ஒரு தந்திர வல்லமையோ அல்லது அனைத்துலக சிகிச்சையோ இல்லை என்பதைத் தற்போது அந் நாடுகள் அறிந்து கொண்டிருப்பதுதான். கொள்கைகள் மற்றும் முதலிடம் தரப்பட வேண்டியவைகள் ஆகியவற்றிற்கிடையே நெருக்கமான இணைப்புக்கள் சாத்தியமானவை யாகவும், அவசியமானவையாகவும் இருக்கின்றன.

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் தொகைப் புதிருக்கு ஒரு விடை:

அதிர்ச்சி தரும் வகையில் பெருகும் மக்கள் தொகை வேறு எந்த இயற்கை நிகழ்ச்சியையும் விட அதிகமாக வளர்ச்சிப் பணிகளை பாதித்து வருகிறது. செல்வம் மிக்க நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையிலே பொருளாதார வளர்ச்சி விகிதங்களில் காணப்படும் பெரும் வேறுபாட்டுக்கு இதுவே காரணம் எனலாம். அதே நேரத்தில் விரைவாக மக்கள் தொகைப் பெருக்கம் குறைவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன. என்ருலும் இவ்விஷயத்தில் சில நாடுகளுக்கு மற்றவற்றை விட சாதகமான சூழ்நிலை உள்ளதெனலாம். 20 ஆண்டுகளுக்கு முன் மக்கள் தொகைப் பெருக்கம் குறைந்த வருவாய் உள்ள நாடுகளில் இந்த அளவிற்குப் பெரிய பிரச்னையாகி விடும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. 1951இல் ஐ. நா. கணிப்பின் படி, 1950 முதல் 1980 வரை ஆசிய ஆப்பிரிக்கா நாடுகளில் பிறப்பு விகிதம் 0.7 முதல் 1.3குள் இருக்கும் என்றே கணிக்கப்பட்டது. எதிர்பாராதவிதமாக இறப்பு விகிதத்தை குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைப்பதில் கண்ட வெற்றியே இந்த மாற்றத்துக்குக் காரணம் எனலாம். வளரும் நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்க விகிதமும் சீராக 1950க்குப் பிறகு வளர்ந்து வந்தது. 1960க்குப் பிறகு இது 2.5 சதவிகிதம் என்ற சராசரி அளவில் உயர்ந்து நின்றுவிட்டது.

இறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. ஆயினும் பிறப்பு விகிதம் இப்போதுதான் குறைய ஆரம்பித்துள்ளது. வளரும் நாடுகள் மிகப் பலவற்றில் பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது என்ருலும் சிலவற்றில் சுகாதார நலப் பணிகளின் விளைவாக இந்த விகிதம் கூடியும் வருகிறது. இனி வரும் பத்தாண்டுகளில் பிறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்துவிட்டாலும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் இந்நூற்ருண்டு முடியும் முன்பே மக்கள் தொகை இரட்டித்து விடும் என்பது தெளிவு.

இம்மாபெரும் மக்கள் தொகை வளர்ச்சி தோற்றுவிக்கும் பிரச்னைகளை குறிப்பிடத்தக்க அளவுக்கு அனைவரும் அறியத் துவங்கியுள்ளனர். வளர்ந்து வரும் நாடுகளின் மொத்தப் மக்கள் தொகையில் 70% வரை கொண்டுள்ள பல நாடுகள் கடந்த சில ஆண்டுகளில் குடும்பக் கட்டுப்பாட்டினைப் பரப்ப பெருமுயற்சி செய்து வருகின்றன. கருவறைக் கருவிகளும், கருத்தடை மாத்திரைகளும் இத்திட்டங்களுக்கு உறுதுணையாக விளங்குகின்றன.

என்ருலும் குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் கொள்கை வகுப்போரினிடையே இந்தப் பிரச்னை பற்றிய தவருன கருத்துக்கள் பல நிலவுகின்றன. இதனுல் மெத்தனமாகவும், அக்கரையில்லாமாலும் இருந்து விடுகின்றனர். அதிகார பூர்வமாக மக்கள் தொகை கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ள நாடுகளிலும் கூட அதற்குரிய சிறப்பிடம் அளிக்கப்படுவதில்லை.

இத்தகைய தவ்ருன நம்பிக்கைகளுள் ஒன்று இங்குமங்குமாக சிதறி வாழும் மக்கள் தொகை கொண்ட நாடுகளில் விரைவில் பெரும் மக்கள் தொகை நல்லது தான் என்றும் அதனுல் பிரச்னைகள் இல்லை என்றும் கருதுகின்றனர். ஏனென்ருல் காலி நிலங்கள் எல்லையற்று உள்ளன என்ற அவர்கள் வாதத்தின் இக்கூற்று இருவகைகளில் தவருனது. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற பெரும் அளவில் முதலீடு தேவைப்படுகிறது. மேலும் இன்றைய உலகில் நிலம் வைத்திருப்பது மட்டும் போதாது என்பதையும் அறிய வேண்டும்.

Photo © Lucien Clergue, Arles, France

தேவையில்லாக் குழந்தைகள் இனி வேண்டாம்

பரவலாக நிலவும் மக்கள் கருத்து என்னவென்றால் பெற்றோர்கள் விரும்புவதால்தான் பிறப்பு விகிதங்கள் அதிகமாகவும் குடும்பங்கள் பெரியனவாகவும் உள்ளன என்றும் இதனால் பெற்றோர்களை சிறு குடும்பக் கருத்தை ஏற்கச் செய்வது இயலாது என்பதாகும். ஆனால் உண்மை நிலை என்னவென்றால் இன்று பிறக்கும் குழந்தைகளால் பல வேண்டப்படாதவை. வளரும் நாடுகளில் பெற்றோர்களின் விருப்பம் பற்றி எண்ணற்ற கருத்துக் கணிப்புக்கள் நடைபெற்றுள்ளன. அவை சுட்டிக் காட்டுவது என்னவென்றால் குடும்பத்தை அளவோடு அமைப்பதற்கான அறிவும் முறைகளும் பெற்றோர் அறிந்திருந்தால் பிறப்பு விகிதம் மூன்றில் ஒன்றாகக் குறைந்துவிடும் என்பதாகும்.

சட்டத்திற்கு புறம்பான கருச்சிதைவுகளும், அவற்றின் விளைவாக ஏற்படும் இறப்புகளும், இலத்தீன்அமெரிக்க நாடுகளிலும் பிற இடங்களிலும் ஒரு பெரும் பிரச்னையாகும் அளவிற்கு அதிகமாகக் காணப்படுகிறது. சிசுமரண விகிதம் திடீரெனக் குறைந்துவிட்டதன் காரணமாக குடும்பங்கள் தம் இயற்கையான அளவைக் காட்டிலும் பெரியனவாகவும் பெற்றோர்களுக்கு சுமையாகவும் மாறிவிடுகின்றன. சுருங்கக் கூறின் உலகின் பல பகுதிகளில் வாழ்பவர்கள் இயற்கையாகவே குடும்பக் கட்டுப்பாட்டின் தேவையை உணர்ந்துள்ளனர். ஆனால் இம்மக்கள் வாய் திறந்து கேட்பதில்லை. பெரிய குடும்பங்களாலும் மிகுதியான பிறப்பு விகிதத்தாலும் தோன்றும் சுமையை பெற்றோர் மட்டும் ஏற்பதில்லை. சமுதாயம் அதை ஏற்க வேண்டியுள்ளது. அடுத்த 25 ஆண்டுகளில் மக்கள் தொகை இரட்டிக்கும் போது வளர்ச்சிப் பணியும், நவீனமாக்கும் பணியும் பல மடங்கு சிக்கலாகி விடுகிறது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பது இயலாததாகி வெளிநாட்டு உதவியிலிருந்து விடுதலைப் பெற வழிகாண முடியாமல் போகிறது. விரைந்து, பெருகும் மக்கள் தொகையால் அடியிற் குறிப்பிட்டுள்ள விளைவுகள் நேரிடையாக விளைகின்றன.

- கல்வி, நலப்பணி, வீட்டு வசதி, குடிநீர் இன்ன பிறவற்றுக்கான செலவு மிகப் பெருகி வரவு, செலவு திட்டங்களை தீட்டுவதில் பெருந் தொந்திரவு விளைகின்றது.
- வளர்ச்சிப் பணிகளை வருங்காலத்தில் ஏற்று நடத்த வேண்டிய இளந்தலைமுறையின் தரம் குன்றுகிறது. குடும்ப அளவுக்கும் குழந்தை நலத்திற்கும் இடையே தலை கீழ் விகிதத்தில் தொடர்புள்ளது. எண்ணிக்கையில் விரைந்து பெருகும் குழந்தைகளால் கல்வியின் தரத்தை உயர்த்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது.
- மக்கள் தொகையில் சார்ந்து வாழ்பவர் எண்ணிக்கை அதிகரிப்பதால் பெரும் பொருள் அவர்களை பராமரிப்பதிலேயே செலவழிந்து விடுகிறது. இதனால் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் முதலீடு செய்வதற்கும் பணமில்லாமல் போய் விடுகிறது.
- விரைவாக மக்கள் தொகை பெருகும் பொழுது வெளிநாட்டு உதவியின் தேவை. அதிகரிக்கிறது. பிறப்பு விகிதத்தை குறைப்பதால் எதிர்காலத்தில் பெறக்கூடிய சுதந்திரம் கூட எட்டாக் கனியாகிறது.
- பொருளாதார விலை ஏறி, வாடகை உயர்ந்து வருமானம் குறைகிறது. இது போன்ற சமயங்களில் சொத்து வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருப்பதால் மேற்கொள்ளப்படும் சிறுசிறு வளர்ச்சிப் பணிகள் கூட அவர்களுக்குப் பயனளிக்காமல் போய்விடுகிறது.
- அக வளர்ச்சியாலும் புறத்தேயிருந்து குடியேறுபவர்களாலும் நகரங்களில் தீவிரமான பிரச்னைகள் தோன்றுகின்றன. நகர மக்கள் தொகை 15 முதல் 18 ஆண்டுகளில் மக்கள் தொகை இரட்டித்து விடுகிறது. வீட்டு வசதிப் பிரச்னை இப்போது தீர்க்க முடியாத பிரச்னையாக பல வளரும் நாடுகளில் காணப்படுகிறது.

மக்கள் தொகைபற்றி ஒருகொள்கை வகுக்க வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி ஒவ்வொரு நாடும் முடிவெடுக்கவேண்டும். இது மிகவும் வாதப் பிரதிவாதங்களுக்கு இடமளிக்கும் பிரச்னை என்பதில் சந்தேகமில்லை. தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகள் கூட அண்மைக் காலம் வரை குடும்பக் கட்டுப்பாடு பற்றி மௌனமாக இருந்து வந்தன. இதே நேரத்தில் கட்டுக்கடங்காத மக்கள் தொகைப் பெருக்கத்தின் வளர்ச்சி, வேகத்தை குறைக்காவிடில் தோன்றும் தீவிர சிக்கல்களைக் கருத்தில் கொண்டு செயல்பட்டாலன்றி பொருளாதாரத் திட்டங்களால் பயன் ஏதும் விளையாதென்பது தெளிவு.

வளர்ந்து வரும் நாடுகளில் மக்கள் தொகை நிலைகள் பெரிதும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஆசியாவின் சில பகுதிகளில் நிலம் போதாத அளவிற்கு அடர்த்தி மிகுந்து காணப்படுகிறது. அதே நேரத்தில் ஆப்பிரிக்காவிலும், இலத்தீன் அமெரிக்கா நாடுகளிலும் எல்லை கடந்த மக்கள் தொகை என்ற பேச்சுக்கே இடமளிக்காத வகையில் இங்கொன்றும் அங்கொன்றுமாக குடியிருப்புக்கள் காணப்

குடும்பக் கட்டுப்பாடும் பொருளாதார உண்மை நிலையும்

படுகின்றன. என்றாலும் வளர்ந்து வரும் நாடுகள் அனைத்திலும் ஓர் 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட தற்போது பன்மடங்கு விரைவாக மக்கள் தொகை பெருகி வருகிறது.

விரைவாக மக்கள் தொகை பெருகுவதற்கான இருவேறு காரணங்களை விரித்தறிவது முக்கியம். ஒரு காரணம் பெற்றோர்கள் தாம் விரும்புவதைவிட அதிகமான குழந்தைகளை பெற்றிருப்பதாகும். இதற்கு சிசு மரண விகிதம் குறைவாக இருப்பதே காரணம். இதனால் பிறப்பு விகிதம் குறைந்தாலன்றி, குடும்ப அளவு குறைவதற்கு வழியில்லை. அடுத்த காரணம் வளரும் நாடுகளில் பெற்றோர் விரும்பிப் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு கொள்கைகள் பெரும்பாலும் வேண்டப்படாத குழந்தைகள் பிறக்காமல் பார்த்துக் கொள்வதாகவே உள்ளன. அவை பெற்றோர் தமக்கு எத்தனை குழந்தைகள் இருக்க வேண்டும் என்பதையும் அவற்றிற்கிடையே இருக்க வேண்டிய கால வித்தியாசத்தை நிர்ணயிக்கவும் உரிமை பெற்றுள்ளனர் என்ற அடிப்படையிலும் கூடுதலான கட்டுப்படுத்தப்படாத மக்கள் உற்பத்தி ஒருபெரிய சமூக பிரச்னை என்ற அடிப்படையிலும் திட்டப்பட்டு வருகின்றன.

பணக்கார நாடுகள் பலவற்றில் மக்கள் குடும்பக் கட்டுப்பாடு முறைகளை ஏற்கும் படித்தாண்ட மக்கள் தொகைக் கொள்கைகளை அரசாங்கம் வகுக்கவில்லை என்று கூறலாம். தாம் உதவியளிக்கும் நாடுகளுக்கு மக்கள் தொகைப் பிரச்னை பற்றி எடுத்துக் கூறுவதற்கு முன்பு தாமே தம்நாட்டில் அவற்றைச் செயல்படுத்தினாலன்றி அவர்கள் கூற்று வெறும் ஊருக்கு உபதேசமாகப் போய்விடும்.

தொழில் மயமான நாடுகளிலும் கூட மக்கள் தொகைப் பிரச்னை மேன்மேலும் ஆராயவும், அக்கறை காட்டவும் வேண்டியதொரு பிரச்னையாக உருவெடுத்திருக்கிறது. வளரும் நாடுகளுக்கு எந்த ஒரு உதவி அளிப்பதற்கும் இது ஒரு நிபந்தனையாக அமைய வேண்டும். தொழில் மயமான சில பெரிய நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் மக்கள் தொகை இயல் இன்னும் பல்கலைக் கழகங்களிலும் ஏதோ ஒரு சில ஆராய்ச்சி கூடங்களிலும் மட்டுமே ஆராயப்படும் ஒரு துறையாக அமைந்துவிட்டது.

பணக்கார நாடுகள், வளரும் நாடுகளில் மக்கள் தொகை கொள்கை வகுக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசுவதற்கு முன் அந்த துறையில் சிறந்த பணியாற்றக் கூடிய, ஆனால் ஆற்ற முடியாமலிருக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு உதவி அளிக்க முன் வர வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களின் தயக்கத்துக்கும் செயலற்ற நிலைக்கும் பெருமளவிற்கு அவற்றில் அங்கம் வகுக்கும் தொழிற் துறையில் சிறந்த உறுப்பினர் நாடுகளின் குழம்பிய மனநிலையே காரணம். தமக்கு மக்கள் தொகைக் கொள்கை வகுக்க வேண்டிய நிர்பந்தம் உள்ள நாடுகளுக்கு பன்னாட்டு நிறுவனங்கள் உதவி செய்வதற்குத் துணை நிற்காமல் சில நாடுகள் ஒதுங்குவது மிகத் தவறாகும்.

1965 ஆம் ஆண்டு முதல் உண்மையிலேயே இத்துறையில் பன்னாட்டு முயற்சிகள் விரிவடைந்து பரந்த அடிப்படையில் செயல்படும் போக்கு காணப்படுகிறது.

யுனிசெஃபும் மற்ற சிறப்பு நிறுவனங்களும், குடும்பக் கட்டுப்பாடு கொள்கை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் உதவி அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மக்கள் தொகை இயல் ஆராய்ச்சிக்கும், குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை ஏற்கும் நாடுகளில் அதை செயல்படுத்துவதற்கான நிபுணர்கள், மற்றும் பயிற்சி வசதி அளிக்கவும் இப்போது அவசியம் ஏற்பட்டுள்ளது.

மற்ற வளர்ச்சிப் பணிகளுடன் ஒப்பிடும்போது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்குத் தேவைப்படும் பொருளுதவி மிகக் குறைவேயாகும். வளரும் நாடுகளின் வரவு, செலவு திட்டங்களைப் பார்த்தால் நெருக்கடியும், அந்நிய செலாவணிக் குறைபாட்டுத் தொல்லைகளும் மலிந்து காணப்படுகின்றன. அதனால் இந்தத் திட்டம் பாதிக்கப்படுகிறது. ஒரு சிறிது வெளி உதவியுடன் இந்தப் பிரச்னையை சமாளித்து விடலாம். இத்தகைய உதவியை தற்போது அமெரிக்க ஐக்கிய நாடும், ஸ்வீடனும் பெருமளவிற்கும் சில பன்னாட்டு நிறுவனங்கள் ஓரளவிற்கும் அளித்து வருகின்றன. இதற்குத் தனியாக உதவி அளிக்கத் தயங்குவோர் ஐ. நா. வின் சிறப்பு அறக் கட்டளை நிதிக்கு பொருள் வழங்குவதன் மூலம் பன்னாட்டு நிறுவனங்களுக்கு உதவி செய்யலாம்.

1967இல் ஐ. நா. வின் மக்கள் தொகை நடவடிக்கைகளுக்கான அறக் கட்டளை நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதிக்கு இப்போது கிடைப்பதை விடப் பல மடங்கு பொருள் அளிக்கப்படவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால் இதற்கு உதவி செய்பவர்களுக்கு அந்தப் பணம் சரியான திட்டங்களுக்குச் சிறந்த முறையில் செலவிடப்படும் என்று உறுதி அளிக்க வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் வெவ்வேறு ஐ. நா. நிறுவனங்கள் மக்கள் தொகைப் பிரச்னையை சமாளிக்க அளிக்கும் உதவி கிடைப்பவருக்கே கிடைப்பதும், கிட்டாதவருக்கு கிட்டாமலும் போய்விடுகிறது. மக்கள் தொகை திட்டங்களுக்கு அளிக்கப்படும் உதவி தேவையில்லாமல் காலம் தாழ்த்தப்படுகிறது. ஒருங்கிணைப்பு வேலை மேலும் சிறப்பாகச் செயல்பட அனுப்பட்டுள்ள பரிந்துரையில் ஐ. நா. மக்கள் தொகை ஆட்சித் தலைவர் பதவி ஒன்றை ஏற்படுத்துவதும் ஒன்றாகும். அவர் இந்தத் துறையில் வளரும் நாடுகளின் தேவையைக் கவனித்து அதற்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்யவும், பல்வேறு ஐ. நா. நிறுவனங்கள் இத்துறையில் ஆற்றும் பணியை ஒருங்கிணைக்கவும் உதவி செய்வார். இந்தத் துறையில் பன்னாட்டு உதவிக்குப் பெரும் வாய்ப்பு உள்ளது. ஆனால் அதற்குமுன் தீர ஆலோசித்து நடைமுறைக் கொத்த திட்டங்களை தீட்டுவது அவசியம்.

தகவல் தொடர்பும், விற்பனை அமைப்பும் சீராக அமையாத சமுதாயங்களில் குடும்பக் கட்டுப்பாடு அறிவைப் பரப்பி, சாதனங்களை வழங்குவது மிகக் கடினமான செய

கி. பி. 2000 இல் மக்கள் தொகை *
(பத்து இலட்சம் என்ற கணக்கில்)

	1968	2000	
	—	குறைவு	மிகுதி
தொழில் வளர்ச்சிபெற்ற பகுதிகள்	**1,040**	**1,250**	**1,400**
ஐரோப்பா	460	490	530
சோவியத் யூனியன்	240	320	350
வட அமெரிக்கா	220	290	350
இதர பகுதிகள்	120	150	170
வளர்ச்சியுறும் பகுதிகள்	**2,430**	**4,720**	**5,560**
சீனா	730	1,000	1,400
பிற ஆசியப் பகுதிகள்	1,100	2,300	2,600
ஆப்பிரிக்கா	330	770	860
இலத்தீன் அமெரிக்கா	270	650	700
உலகம்	**3,500**	**6,000**	**7,000**

* கி. பி. 2000இல் இருக்கக்கூடிய மக்கள் தொகையை "குறைந்த", "உயர்ந்த" கருவளத்திற்கேற்ப பிரித்திருக்கிறோம். கருவளம் "குறைந்த" பகுதியில் விரைவாகக் குறையுமெனவும் "உயர்ந்த" பகுதியில் மெதுவாகக் குறையுமெனவும் எண்ணலாம். சராசரி வயது 74 ஆகும் வரை இறப்பு வீதம் குறையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இப்புள்ளி விவரங்கள் கடந்த 10 ஆண்டுகளின் அனுபவத்திலிருந்து 1963இல் கணக்கிடப் பெற்ற உலக மக்கள் தொகை மதிப்பீட்டில் (ஐ. நா. 1966) காணப்படுபவை.

லாகும். எங்கெங்கொல்லாம் முடியுமோ அங்கெல்லாம் நலப்பணிகளையும் குடும்ப நலத் திட்டத்தையும் இணைத்து செயலாக்குவது நல்லது என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. குழந்தை பெற்ற சில நாட்களில் தாய்மார்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு பற்றிக் கூறுவதுடன் தாய்சேய் நலத் திட்டங்களையும் எடுத்துக் கூறுவது நன்மை பயக்கும். ஏனென்றால் ஓரிரு மக்கள் போதும் என்று கருதுபவர்கள், அம்மக்கள் நிச்சயமாக வளர்ந்து பெரியவர்கள் ஆவார்கள் என்னும் உறுதி பெறல் வேண்டும். வளரும் உலகில் பெற்றோர் பலர் பெரிய குடும்பங்களை விரும்புவதற்கு நியாயமான பொருளாதாரக் காரணங்கள் உள்ளன. அவர்களை அறியாதவர்கள் என்றும், விதிவசப்பட்டவர்கள் என்றும் கூறுவதும் சரியாகாது. அத்தகையவருக்கு குடும்பக்கட்டுப்பாடு அறிவும், வசதிகளும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். குழந்தையும் நான்கு காசும் சம்பாதிக்கும் என்ற உணர்வும் வயதான காலத்தில் அவர்களின் நிழலில்தான் வாழ வேண்டும் என்ற உணர்வும் கொண்டுள்ளவர்களிடையே குடும்ப அளவை கட்டுப்படுத்துவதற்கு ஊக்கம் தரும் நிலையில்லை. பெருகும் மக்கள் தொகையால் சமுதாயத்திற்கு ஏற்படும் சிக்கல்கள் பற்றி அவர்கள் நினைக்கமாட்டார்கள்.

இதனாலேயே மரபு வழிப்பட்ட ஒரு சமுதாயத்தில் குடும்பத்தின் பொருளாதார சமூக நிலைகளை மாற்றும் வகையில் தீட்டப்படும் கொள்கைகளும் நிறுவன அமைப்புக்களும் மக்கள் தொகை பெருக்கப் பிரச்னையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. பொருளாதார வளர்ச்சியும் நவீன மயமாக்குதலும் மெல்ல மெல்ல காலப் போக்கில் பெரிய குடும்பத்தை ஒரு சுமையாக்கி, அதன்வழி, குடும்ப வளர்ச்சிக்கு வரம்பிட்டு மக்கள் பெருக்கத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறது என்பது உண்மையே. ஆனால் இதற்கு மிகமிக நீண்ட காலம் ஆகிறது. பெண்கல்வி இத்துறையில் மிகப்பயன் தரும் என்று கருதப்படுகிறது: ஆனால் கல்வி, கருத்துக்களை மாற்றிக் கொண்டு செயல்படும் அளவிற்குப் பயன் தரவில்லை என்பது பலர் அனுபவத்தில் கண்ட உண்மை. பத்திரிகைகள், வானொலி, டெலிவிஷன் முதலியன புதுக் கருத்துக்களைப் பரப்பி ஒரு இலட்சியக் குடும்பம் சிறியதாக, ஆனால் ஆரோக்கியம் மிக்கதாக, கல்வியறிவில் சிறந்ததாக இருக்க வேண்டும் என்பன போன்ற உணர்ச்சிகளை ஏற்படுத்த நல்ல சாதனங்களாகும். சிறு சேமிப்புக்கான வங்கிகள் ஆயுள் காப்பீடு நிதி ஆகியவை வயது காலத்தில் முதியவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் சிறந்த அமைப்புக்களாகும். பெரும்பாலான வளரும் நாடுகளில் முதியோர் பாதுகாப்பு திட்டங்கள் செயல்பட்டு வருகின்றனவென்றாலும் அவை பெரும்பாலும்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)



Photo © Image Roche - Dr R. Lassere

வளர்ச்சியுறும் நாடுகளில் 20 ஆண்டுகளுக்கு முன்னிருந்ததைவிட மிக விரைவாக மக்கள் தொகை இன்று பெருகி வருகின்றது. ஆனால் அண்மையில் இப்பெருக்கத்தின் விளைவுகளைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. வளர்ச்சியுறும் நாடுகளின் மக்கள் தொகையில் 70 சதவீதம் வாழும் நாடுகளில் சில ஆண்டுகளில் குடும்பக் கட்டுப்பாட்டிற்கெனப் பெரும் திட்டங்கள் தொடங்கியுள்ளனர். மேலே: பாகிஸ்தானில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாட்டு மருத்துவ நிலையம். பாகிஸ்தானில் மக்கள் தொகை ஆண்டுக்கு 3 சதவீதம் பெருகுவதால் விரைவில் அங்கு மட்டு மீறிய பெருக்கம் ஏற்படும். (இங்கிலாந்திலும் ஃபிரான்சிலும் 0·6 சதவீதமே பெருகுகின்றது.)

வேலையின்மைப் பெருக்கம்

வளர்ந்து வரும் நாடுகளில், அவற்றில் பெரும்பாலானவற்றில் என்று கூற முடியாவிட்டாலும், பலவற்றில் வேலையின்மை பெரும் சிக்கலாகவும் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகவும் உள்ளது. முன்னேற்ற முயற்சிகளின் வருந்தத்தக்க ஒரு கூறு என்னவென்றால், பயனுள்ள வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியாமற் போவதே. வேலையின்மையும், மனித ஆற்றலைக் குறைவாகப் பயன்படுத்துவதும் 1960 முதல் அதிகமாயின. மக்கள் தொகை உயர உயர நிலைமையில் அச்சமூட்டும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

வேலையில்லாத் திண்டாட்டத்தின் பயங்கரம் பற்றிய சான்றுகள் பெருவாரியாக இருப்பினும் குறிப்பிட்டுக் கூறத்தக்க சான்றுகள் எவையும் கைவசமில்லை. வளரும் நாடுகளில், பன்னாட்டுத் தொழிலாளர் சங்கம் வேலையின்மைபற்றி ஆராய பொருள் வசதி திரட்டிக் கொண்டுள்ளது. அனைவரும் இதற்கு உதவ வேண்டும். வேலையின்மைக்கும் குறைவான வேலைக்கும் இடையேயான வேறுபாட்டினை மரபு வழிப்பட்ட சமுதாயங்கள் இன்னமும் அறிந்து, கொள்ளவில்லை.

''தகுதிக்குக் குறைவான வேலை'' என்ற தொடருக்குப் பொருள் என்னவென்றால், ஒருவரின் தகுதிக்கும் உரைக்கும் ஆற்றலுக்கும் முழு வாய்ப்பு அளிக்காததேயாகும். எடுத்துக்காட்டாக, பயிற்சி பெற்றோர் எந்தவிதப் பயிற்சியும் தேவையற்ற, கூலிவேலை செய்வதும், கூலி வேலை செய்யத் தக்கவர்கள் வேளாண்மை போன்ற துறைகளில் வேலை செய்ய வாய்ப்பு இல்லாமையுமாகும். 'தகுதிக்குக் குறைந்த வேலை' என்பது பற்றிய சரியான மதிப்பீடு எதுவும் இல்லை என்றாலும், ஒன்று மட்டிலும் உறுதி. வளரும் நாடுகளில் இதுபற்றி எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் பிரச்னையின் முழுவடிவை வெளிக்காட்டவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டமும், தகுதிக்குக் குறைந்த வேலையும் விரைந்து பெருகும் மக்கட் தொகையின் விளைவுகளே. மக்கட் தொகைக் கொள்கைகள் இப் பிரச்னையைப் பெரும் அளவிற்குப் பாதிக்கலாமெனினும், அது நீண்ட காலப் பிரச்னையே, வரப்போகும் 15 ஆண்டுகளில் உழைக்கும் ஆற்றலை உருவாக்கக் கூடியவர்கள் ஏற்கெனவே பிளந்துவிட்டனர்.

வேலை வாய்ப்பை விரைந்து பெருக்குவது இயலாத தொன்றன்று. அதற்குப் பெருத்த வேகமும், வளைந்து கொடுக்கும் தன்மையும், ஆற்றல் மிக்க தொழில் நிர்வாகமும், விரைவான மாற்றத்தை ஊக்குவித்தலும் தேவைப்படுகின்றன. குறைந்த வருவாய் நாடுகளில் வேளாண்மை அல்லாத பகுதிகளில், விரிவான முன்னேற்ற முயற்சிகள் போதிய வேலை வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கத் தவறியதற்கான முக்கிய காரணம், தொழிலாளர்கள் தேவைப்படாத தொழில் நுணுக்கத்திற்கு முதலீட்டைப் பெருக்கிச் செயற்கையாக விலைகளைக் குறைக்க முயன்றமையே யாகும். தொழில்மய நாடுகளில் இம் முயற்சிக்குத் தேவையான தொழில் நுணுக்க அறிவு ஏற்கெனவே உள்ளது. இதனால் உதவி அளிக்கும்போதும், அல்லது தனிப்பட்ட முறையில் தம் நாட்டு ஒப்பந்தக்காரர்கள் உதவியளிக்க முற்படும்போதும் முற்கூறியவாறு மாறுதல் ஏதுமின்றி ஏற்றுமதி செய்ய முனைகின்றனர். பல இடங்களில் அதைச் செயல் படுத்துவது இன்றியமையாததாகவும் போட்டிகளுக்கிடையில் திறமையைப் பாதுகாக்க வேண்டியிருப்பினும் தற்போதைய, கொள்கைகளில் முதலீடு மிகுந்த அமைப்பே கவர்ச்சி மிக்கதாய்த் தோன்றுகிறது. சலுகை வட்டி வீதங்கள், மதிப்புக்கு அதிகமான செலாவணி வீதங்கள், வேறுவேறான வரிவிகிதங்கள் ஆகியவை முக்கிய இறக்குமதிக் கருவிகளின் விலையைக் குறைத்து விடுகின்றன. அதே சமயம் தொழிலாளர்களுக்கான உண்மை ஊதியம் குறைவாகவே உள்ளது.

தொழிலாளரைப் பயன்படுத்தும் திறனை மிகுதிப் படுத்துவதை வரவேற்காத அளவுக்கும், உற்பத்திக் கூறுகளில் முதலீட்டைப் பெருக்கித் தொழிலாளர் எண்ணிக்கையைக் குறைப்பதை வரவேற்கும் அளவிற்கும் போகாதவாறு பெரும் கூலி விகிதங்கள் அமைய வேண்டும். ஆனால் பல வளரும் நாடுகளில் உள்ள வருவாய் ஏற்றத்தாழ்வுகள் அரசியல் காரணங்களால் தீர்மானிக்கப்படுகின்ற வேலைவாய்ப்புக் கொள்கையின் விளைவாக ஊதியம் மிக உயர்ந்து விடுகின்றது. அத்தகு கொள்கைகளால் முழு நேர வேளாண்மையைவிட ஒரே வழி, நகரங்களில் கூலி மிகுந்திருப்பதினால் தொழிலாளர் பெயர்ச்சியும் உண்டாகியது.

அதிகரிக்கும் தொழிலாளரை ஏற்றுக் கொள்ளும் பெருஞ் சுமையைப் பெரும்பாலான வள்ரும் நாடுகளில் தொழிலாளரில் 60 முதல் 80 சதவிகிதத்தினர் ஈடுபட்டுள்ள வேளாண்மையை ஏற்க வேண்டியதாகிறது. வேளாண்மை கவர்ந்த பிற தொழில்கள் விரைந்து வளர்ந்தாலும் அத் தொழில்களின் சிறு பகுதியினரே வேலை பெற முடியும். வருவாயைக் குறைக்காமல் வேலை வாய்ப்புக்களை விரைந்து பெருக்கும் வேளாண்மைத் திட்டம் முதலீட்டைச் சுருக்கி, தொழிலாளரைப் பெரிதும் ஈடுபடுத்தி உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும். இத்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் விளைவது பற்றிப் பலர் ஐயுறுகின்றனர். சென்ற சில ஆண்டுகளில் புதுவகை விதைகளும் நீர்ப்பாசனத்தாலும் பெருகிய விளையுள் ஆட் குறைப்புச் செய்து முதலீட்டைப் பெருக்கியதால் அல்ல. இவ் உண்மை வேளாண்மைத் துறையில் ஊக்கம் அளிக்கக் கூடியது.

எனினும் வேளாண்மை வருவாய் அதிகரிக்கும்போது, வசதியுள்ள நிலக்காரர்கள் அதிகப்படி தொழிலாளரை அமர்த்துவதை விட, அவசரப்பட்டு இயந்திரங்கள் புகுத்துவதை அரசாங்கக் கொள்கைகள் தூண்டுவதாயிருக்கும் நிலையில்தான் விவசாய இயந்திரங்களில் முதலீடு செய்வார்கள். இவ்வகையில் தொழிற் கொள்கையில் செய்யப்படும் தவறுகள் விவசாய முன்னேற்றத்தில் செய்யமாலிருக்க வேண்டும் என்று கூறத் தோன்றுகிறது.

வேலையில்லாப் பிரச்னை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. வேலை இன்மையையும் தகுதிக்குக் குறைவான வேலையில் இருப்பதையும் போக்க திட்டவட்டமான திட்டம் உடனடியாகத் தீட்டப்பட வேண்டும்.

வளர்ச்சியுறும் நாடுகளில் மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். இஃது ஏற்கெனவேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கின்றது. வலப்புறம்: பொதுவாக மக்கள் தொகை பெருகுவதைப் போல் இரு மடங்கு நகர்ப் புறங்களில் தொகை பெருகுகின்றது. இவ்வாறு பெருகுமெனில், கி பி 2000இல் கல்கத்தா போன்ற நகர்களில் மக்கள் தொகை 3·4 கோடியாகிவிடும்.



Photo © Alain Keler

கடந்த 20 ஆண்டுகளில் சுகாதாரத்தைப்போல் வேறு எந்த சமூக நலத் துறையும் முன்னேற்றம் அடையவில்லை எனலாம். வளர்ச்சியுறும் நாடுகள் பலவற்றில் மக்களின் சராசரி வயது உயர்ந்து விட்டது. இதே அளவு உயர தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு நூற்றாண்டானது. பெரும் பகுதிகளில் இப்போது மலேரியா ஒழிக்கப்பட்டு விட்டது இதனால் உழைப்புத் திறன் வளர்ந்து புதிய நிலங்கள் பயிரிடப் படுகின்றன: செனகாலில் மலேரியா கொசு வாழும் இடங்களில் பூச்சி கொல்லி தெளிக்கப்படுவதைப் படம் காட்டுகிறது.

Photo © Afrique Photo, Paris

பல பகுதிகளில் பயிற்சி பெறாத தொழிலாளர்களை உடனடித் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். எடுத்துக் காட்டாக வீடுகள், பள்ளிகள் கட்டி சுகாதார வசதிகள், கிராமச் சந்தைகள், துணைச் சாலைகள், நீர்ப்பாசன வசதிகள் முதலியவற்றை அமைக்கலாம். இதற்கு மிகுந்த நிர்வாக முயற்சியும் பெருந் தொகையும் தேவைப்படினும் அதனால் கூடுதல் வருவாயைத் தோற்றுவித்துப் பெருத்த பொருட் தேவைகளை ஏற்படுத்தும் அதிகமான தொழிலாளரை ஈடுபடுத்தி நிர்வகிக்கும் திறனுள்ள நாடுகளும் வருந்தத் தக்க நிலையில் அன்னியச் செலாவணிக் குறைவு, பண வீக்கம் முதலியவற்றுக்காகப் பயந்து அவ்வாறு செய்யாமல் விடுகின்றன. வசதியான வகையில் தரப்படும் அறிவு சார்ந்த அயல் நாட்டு உதவி பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றின் விளைவாக இந்தப் பிரச்னையின் கடுமை தணிக்கப் படக்கூடும்.

வளர்ச்சித் திட்டங்கள் சமூக அரசியல் குழப்பங்களால் தடைபடாமல் இருக்க வேண்டுமானால் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதில் முன்னேற்றம் காண வேண்டும். வளரும் உலகில் உருமாறும் நகரங்களில்தான் வேளாண்மையில் தேக்கமும் தொழிற் சாலையில் வேலையின்மையும் சேர்ந்து தீவிர விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

நகரங்களில்தான் மக்கள் தொகை இருமடங்காகப் பெருகுகின்றது. சில பெரு நகரங்கள் இன்னும் விரிந்து பெருகுகின்றன. நாட்டுப் புறங்களில் தேக்கம் உண்டாகி, நகர்ப்புறங்களுக்குக் குடிப் பெயர்ச்சி ஏற்படுகின்றது. நகர்களில் பொதுவாக இறப்பு வீதம் குறைந்தும் சமூகத்தின் பிற சக்திகளின் துணைக் காரணமாக நகரமக்கள் தொகை பெருகலாமா என்னும் கேள்வி எழுகின்றது. இன்றைய போக்கு அப்படியே தொடர்ந்தால் இந்தியாவின் மிகப் பெரிய நகரம் கி. பி. 2000இல் 350 இலட்சத்துக்கும் அதிகமானவர்களைக் கொண்டிருக்கும். வளரும் நாடுகளில் சிறிய நடுத்தரக் கேந்திரங்களின் வளர்ச்சி சந்தை, பணிமனைகள், கிடங்கு வசதிகள், உள்ளூர்ப் பொருள்களைப் பக்குவப் படுத்தும் சிறு தொழில்கள் ஆகியவற்றை வலியுறுத்தும் சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அத்தகைய கேந்திரங்கள் பயிற்சி பெறாத தொழிலாளருக்குக் குறிப்பிடத்தக்க அளவு வேலை தரக்கூடும்.

தமிழில் : 'நம்பி'

பசுமைப் புரட்சி

விரிந்த வேளாண்மைத் துறையில் வளர்ச்சிக்குறைவால் ஏழ்மை நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் பற்றிய நம்பிக்கை நலிந்துவிடும் என்று அண்மைக்காலம் வரை தோன்றியது மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ற பயிர் விளைச்சல் இல்லாமல், பல நாடுகளில் விளைச்சல் குறைவாகவே இருந்தது. 1930ஆம் ஆண்டுவாக்கில் நிகரமாக 140 இலட்சம் டன் தானியங்களை ஆண்டொன்றுக்கு ஏற்றுமதி செய்து வந்த பின்தங்கிய நாடுகள், 1960 ஆம் ஆண்டுவாக்கில் 100 இலட்சம் டன் தானியங்களை ஆண்டொன்றுக்கு இறக்குமதி செய்தன தெற்காசியப் பகுதியில் தொடர்ந்து, இரண்டு ஆண்டுகளாகப் பருவ மழை பெய்யாததால் 1966, 1967ஆம் ஆண்டுகளில் இறக்குமதி இன்னும் அதிகமாகியது உடனடியாகப் பஞ்சம் வரும் என்று எதிர்பார்த்தனர்.

விதை ஆராய்ச்சி, நீர்ப்பாசனப் தேக்கங்கள், விரிவாக்கும் வேலை, வேளாண்மைக்கல்வி இவற்றில் இப்பொழுது ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கணக்கில் எடுக்காமல் எழுந்தவை அந்த அச்சுறுத்தும் முன்னறிக்கைகள் வேளாண்மைப் பழக்கங்களும் உற்பத்தியும் அதிகவிலை ஊக்கமுறைகளால் எவ்வளவு மாறுபடுவன என்பதும் கருத்திற்கொள்ளப்படவில்லை உற்பத்திக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு விளைபொருள்களின் விலையும் நல்லூதியம் தரும் நிலை ஏற்பட்டபின், வியத்தகு விரைவில் புது உத்தி முறைகளை ஏற்பதற்குக் குடியானவர்கள் இசைவு காட்டினர். முன்னிருந்த நம்பிக்கையற்ற நிலையிலிருந்து இன்றுள்ள நிலை முழுவதும் வேறுபட்டது. முன்னேறும் உலக நாடுகளில் பெரும்பகுதி உணவு உற்பத்தியில் பெரிய முன்னேற்றங் கண்டுள்ளது. இது 'பசுமைப் புரட்சி' என்று பொதுவாகக் குறிக்கப்படுகிறது.

இந்தியாவின் உணவு விளைவு 1964–65இல் இருந்த 890 இலட்சம் டன் அளவிலிருந்து 1968–69 இல் ஏறத்தாழ 80 இலட்சம் டன் கூடுதலாகியது. இரண்டே ஆண்டுகளில் பாகிஸ்தான் அதன் கோதுமை விளைச்சலை 50 சதவீதம் உயர்த்தியது. 1966–1968ஆம் ஆண்டுகளுக்கிடையில் இலங்கையின் அரிசி விளைச்சல் 34 சதவீதம் உயர்ந்தது; பிலிப்பைன்ஸில் இருமுறை அரிசி மிகுவிளைச்சல் கண்டதனால் அரை நூற்றாண்டுக் காலமாக அரிசி இறக்குமதியை நம்பிய நிலை முடிவுற்றது. மிகுந்த திடீர் முன்னேற்றங்கள் ஆசியாவில் அடர்ந்து நிகழ்ந்தன.

இந்தத் திடீர் பெருக்கங்களுக்கு இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் அனுபவம் எடுத்துக்காட்டாகும். இந்தியாவின் பயிர்த்தொழில் 70 சதவீதம் மக்கள் ஈடுபட்டு நாட்டின் விளைபொருளில் 46 சதவீதம் வழங்குகின்றனர். எனினும், 1960–1969 ஆம் ஆண்டுக் காலத்தின் முற்பகுதியில் வேளாண்மைத் தொழில் இந்தியப் பொதுவளர்ச்சி செலவினங்களிலிருந்து 15 சதவீதமே பெற்றது; அது வளரத்தக்க துறையாகக் கருதப்படவில்லை. உழவர்களுக்கு அதிக விலை ஊக்க முறைகள், வேளாண்மைத் துறைசார்ந்த உரம், மேம்பாடான வித்துக்கள், உழவுக் கருவிகள் முதலானவை வழங்குதல், கடன் வசதிகள் செய்தல் இவற்றில் கவனம் செலுத்தப்படவில்லை. 1965, 1966 ஆண்டுகளில் இந்தியாவில் பெரும் பகுதியைப் பாதித்த வரட்சி காரணமாக உணவு இறக்குமதியை ஆண்டொன்றுக்கு 100 இலட்சம் டன்களுக்கு உயர்ந்த வேண்டியதாயிற்று, இது வேளாண்மைத் துறைக் கொள்கைகளை அடியோடு திருத்தியமைக்க வேண்டிய தேவையைத் தெளிவாக்கியது.

அத்துடன் அதிக விளைச்சலைக் கொடுக்கும் புதிய கோதுமை, அரிசி வகைகள் கிடைக்கலாயின. இந்தக் ''குறுகு'' வகைகள் மெக்ஸிகோவிலும், பிலிப்பைன்ஸிலும் ஃபோர்டு, ராக்ஃபெல்லர் அற நிறுவனங்களின் ஆதரவில் வளர்ச்சியுற்றன நீண்ட வழக்கத்திலுள்ள வகைகளைக் காட்டிலும் இவை மூன்று—நான்கு மடங்கு உரங்களைப் பெறுவதற்கு இடந்தந்தன பாசனமும் பூச்சிக் கொல்லிகளும் நன்கு இருக்குமிடத்து விளைச்சல் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாகும். இவ்வகையான வளமுறைகள் இந்தியாவில் விரைந்து ஏற்கப்பட்டன; உழவுத்துறையின் முதலீடு விரிவடைந்தது; ஊக்குவிக்கும் விலைவாசி ஏற்றப்பட்டது. இந்த நடவடிக்கைகளெல்லாம் சேர்ந்து அதிக விளைச்சல் சேரும் கணிசமான புது ஊக்க முறைகள் ஆயின.

1950–59 ஆண்டுகளில் சரியான வடிகால்கள் இல்லாததால், மேற்குப் பாகிஸ்தானில் அடிநில நீர்மட்டம் உயந்தது, விளைநிலங்களில் பெரும் பரப்பில் உவர்த்தன்மை மிகுந்து விளைச்சலில்லாமல் போயிற்று. ஆனால் அச்சுறுத்திய அழிவு நன்மையாக மாற்றப்பட்டது. உவர்த்தன்மைச் சிக்கலுக்கு ஆழமான குழாய்க்கிணறுகள் இறக்கித் தொடர்ந்து நீரை வெளியேற்றுவதன் மூலம் வழிகாணமுடிந்தது. உவர்நிலங்களில் நீர்மட்டங் குறைக்கப்பட்டு வளநிலங்களாக மீட்கப்பட்டன. இந்தக் குழாய்க் கிணறுகள் பாசனத்துக்கான நீரையும் மிகுதியாக வழங்கின. முதலில் பெரிய பொதுத் திட்டங்கள் வேண்டுமென்று கருதப்பட்டது; ஆனால் உழவர்கள் இந்தக் கண்டுபிடிப்பைத் தாங்களாகவே ஏற்றுக் கொண்டார்கள். ஏனென்றால், அடிநில நீர் விளைச்சலுக்கு மிகுதியாகப் பயன்பட்டது தனிப்பட்டவர்களின் குழாய்க்கிணறுகள் அமைக்கும் எழுச்சி மேற்குப் பாகிஸ்தான் வேளாண்மைத்துறை புத்தமைப்பில் கண்டார் வியக்கும் காட்சியாகியது. 1959–60ஆம் ஆண்டில் தனி உழவர்கள் ஏறத்தாழ 1,300 கிணறுகளை அமைத்தனர் இக்கிணறமைப்புகள் 1963–64ஆம் ஆண்டுவாக்கில் ஆண்டொன்றுக்கு 6,600 ஆகவும், 1967-68 ஆம் ஆண்டு வாக்கில் ஏறத்தாழ 9,500 ஆகவும் பெருகின தொழில் நுட்பக் கோணத்தில் இக்கிணறுகள் நிறை பயனுடையன அல்லவெனினும் அவை மிகவும் ஊதியம் தருவனவாக இருந்தன 1959–60 ஆம் ஆண்டு முதல் தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் ஏற்பட்ட குழாய்க் கிணற்றுப் பாசனமே ஆகும் 1965-66ஆம் ஆண்டு வரையான விளைச்சல் மிகுதியில் பாதியளவிற்குக் காரணம்.

இந்தியாவைப் போலவே புதுவகைகள் விரைவிலேயே அங்குப் புகுத்தப்பட்டன புதிய கோதுமை வித்துக்கள் பயிரிடும் பரபபு 23 இலட்சம் ஏக்கராக உயர்ந்தது; முன் ஆண்டில் அதாவது 1966–67இல் அப்பரப்பு

விதை ஆராய்ச்சியிலும் நீர்ப்பாசனத்திலும் முன்னேற்றம்

2 இலட்சம் ஏக்கராகவே இருந்தது. ஐ. ஆர். 8 என்று சொல்லப்படும் புது வகை அரிசி 1967ஆம் ஆண்டில் 9,000 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டது. 1968ஆம் ஆண்டில், 900,000 ஏக்கருக்குத் தேவையான வித்தை அது அளித்தது. வெளிநாட்டுக் கடன் உதவியால் கிடைக்கும் உரம் அதிகரித்தது; உண்மையிலேயே தானிய விளைச்சலில் திடீர்ப் பெருக்கம் ஏற்பட்டது.

புதிய தொழில் நுட்பமும், புதிய கொள்கையுமே இந்தப் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தின. இதன் பலன் எவ்வளவு ஆழமாகவும் விரைவாகவும் உள்ளது என்பதையும், இதுபோன்ற திடீர் முன்னேற்றங்கள் உலகின் பிற பகுதிகளிலும் பின்பற்றப்படுமா என்பதையும், இப்போதே கூறுவதற்கில்லை. ஆனால், விளைச்சலுக்கான எதிர்காலம் மிக ஒளிமயமாகத் தோன்றுகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக பலர் எதிர்பார்த்தது போல் உழவர்கள் பழைய பழக்க வழக்கங்களில் கட்டுண்டு கிடக்கவில்லை; பயிர்ச் செலவையும் விலையையும் பற்றி அவர்கள் சிந்தித்தனர். அதிக விளைச்சலுக்கான உறுதியை அளித்தால், அதற்கேற்ப அவர்கள் நடப்பார்கள். வளர்ச்சிக் கொள்கைக்கான இந்த அனுபவ அறிவு உழவுத் துறைக்கும் அப்பால் பரவுகின்றது.

புதிய வேளாண்மைத்துறை நுட்பங்களுக்கு இன்றியமையாத உரத்துறையும் நன்கு வளர்ச்சியுற்றது. போருக்குப் பின் உற்பத்திச் செலவுகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன;மேலும் முன்னற்றம் எதிர்பார்க்கப்படுகிறது. 1963ஆம் ஆண்டு முற்பட்ட 'நைட்ரஜன்' பொறியங்களை விட புதுப் பொறியங்களின் விலை 50 சதவீதம் குறைந்து விட்டது. அதைப் பயன்படுத்துவதும் பெருகிவிட்டது. இந்தியாவில், முந்திய ஆண்டைக் காட்டிலும் 1966–67ஆம் ஆண்டில் உரம் வழங்குவது ஏறத்தாழ 80 சதவீதம் உயர்ந்துள்ளது; அடுத்த ஆண்டில் மேலும் 50 சதவீதம் உயர்ந்துள்ளது. உள் நாட்டிற்கான உர உற்பத்தி 1965—1968 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இரு மடங்காகியது. உரம், அதற்கான மூலப் பொருள்கள் இவற்றின் இறக்குமதி இப்பொழுது இந்தியாவின் மொத்த ஏற்றுமதி ஈட்டத்தில் ஐந்தில் ஒரு பகுதியாகும். பாகிஸ்தானில் உரத்தைப் பயன்படுத்தல் 1960ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஈராண்டுக் காலத்திலும் இருமடங்கு பெருகியது. வளர்ச்சியுறும் பிற நாடுகளிலும் இது போன்றே திடீர்ப் பெருக்கம் உள்ளது. 1956—57 முடிவில் எடுக்கப்பட்ட ஐந்தாண்டுச் சராசரிக் கணக்கை 1967—68இன் கணக்கோடு ஒப்பிடும்போது, நைட்ரஜன், பாஸ்வரம் உரங்கள் பயன்பாடு ஐந்து மடங்காகவும், பொட்டாஷிய உரங்கள் நுகர்ச்சி ஆறு மடங்காகவும் உயர்ந்துள்ளது.

உணவல்லாத மற்றப் பயிர்களின் வளர்ச்சி, அரிசி, கோதுமை வளர்ச்சி போல அவ்வளவு விரைவாக இல்லாவிடினும் கணிசமாக உள்ளது. 1953 ஆம் ஆண்டுக்கும் 1967ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், பருத்தி உற்பத்தி ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் 40 சதவீதம் உயர்ந்தது. எனவே, இப்பகுதிகளில் நெசவுத் தொழில் விரைவில் வளர்ந்தது. அதே காலத்தில் ஆப்பிரிக்காவின் காப்பிப் பயிர் மும்மடங்காக அதாவது 393,000டன்னிலிருந்து லிருந்து 1,145,000 டன்களாக உயர்ந்ததன் காரணமாக, இன்று ஆப்பிரிக்கா உலக உற்பத்தியில் 30 சதவீதம் அளிக்கிறது. இந்த மிகை வளர்ச்சி காப்பிக்கொட்டையை விற்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இது பயிர் மாற்றுவதிலும் அதிக வளர்ச்சியிலும் வெப்ப மண்டல வேளாண்மைத் துறையின் ஆற்றலை விளக்குவதாகிறது.

உணவு தானிய உற்பத்தியில் தடை தகர்க்கப்பட்டாலும், பசுமைப் புரட்சியால் தொடர்ச்சியான புதிய சிக்கல்கள் தோன்றியுள்ளன.

ஒரு வகை வித்து சில ஆண்டுகளே நோயின்றிப் பயன்படுத்த முடியும். எனவே, பல புதிய வகை வித்துக்களை வோளாண்துறைப் புத்தாய்வுகளின் வாயிலாக வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு தொடர்ச்சியான பெருஞ்செலவு காத்து நிற்கிறது. மேலும் விரைவாக உழவுத்துறை விரிவடையச் செய்ய வேண்டும்; பாசனத்திற்காகவும் உர உற்பத்திக்காகவும் பெருந்தொகை முதலீடு செய்ய வேண்டும். உற்பத்தி பெருகுவதால் வாணிகக் களத்தில் நல்ல விலை போகச் செய்வதும் வழங்கீடு செய்வதும் கிராமக் கடன் வசதி செய்து கொடுப்பதும் அவசியமாகிறது.சீராக

கொடுப்பதும் அவசியமாகிறது. சீராக உற்பத்தியைப் பெறுவதற்கும் தொழில் நுட்பங்களை ஏற்பதற்கும், பிற பயிர்களைப் பேணுவதற்கும் எப்போதும் பல வகையில் தூண்டியவாறு இருத்தல் வேண்டும்; இது கடினமான காரியம்.

வருவாயைப் பெருக்க வேண்டியுள்ளது. ஆனால் வேளாண்மை வருவாயில் நேரடியாக வரிபோடுவது வளர்ந்து வரும் நாடுகளில் கடினம். ஏனென்றால் பெரும்பான்மையான உழவர்கள் மிக ஏழ்மையிலுள்ளனர். மேலும் அத்தகைய வரி அரசியலுக்குகந்ததுமல்ல. வரி வசூலிப்பதற்காகும் செலவும் அதனை விஞ்சுவதாகும். எனினும், புதுத் தொழில் நுட்பங்கள் சில நாட்டுப்புற வருவாய்களை மிக அதிகமாக்கிக் கொண்டிருக்கின்றன. வேளாண்மையிலிருந்து அதிக வருவாய் வந்தால், அந்த வருவாய்களிலிருந்து அரசுக்கு வருமானம் வர வேண்டும். வேளாண்மை வரியும், அதிகமான விவசாய உற்பத்தியை நகர மக்கள், உற்பத்தியாளர் நிலவுடைமையாளர் இவர்கள் பிரித்துக் கொள்ளுவதும் பல கொள்கைச் சிக்கல்களுக்கு இடமளிக்கின்றன. இதனால் அரசியல் விளைவுகள் ஏற்படலாம். எதிர்கால வளர்ச்சி பாதிக்கப்படலாம்.

பசுமைப் புரட்சி எட்டாத ஆப்பிரிக்காவின் பெரும்பகுதியும் இலத்தீன் அமெரிக்காவும் தொழில்நுட்ப மாறுபாடுகளை நாட்டுப்புறங்களுக்கு அறிவிப்பதில் அதிக இன்னல் பட வேண்டியுள்ளது. இன்றும் பலர் நாட்டுப்புற வளர்ச்சியைப் புறக்கணித்தே வருகின்றனர். எல்லா நாடுகளுக்குமே, புதுத் தொழில் நுட்பமூலம் பெறும் வளர்ச்சி, உணவு தானியங்கள் தவிர்த்த மற்றைய ஏற்று

(தொடர்ச்சி 34-ஆம் பக்கம் பார்க்க)

ஜாக்சன் அறிக்கை

ஐ. நா. வளர்ச்சித் திட்டங்கள்பற்றிய மதிப்பீடு

இப்போது வெளியிடப்பட்டுள்ள 6000 பக்கங்கொண்ட நீண்ட அறிக்கை ஒன்று ஐ. நா. வளர்ச்சித் திட்ட செயலாற்றல் பற்றிய ஆய்வின் முடிவுகளைத் தருகின்றது. "ஐ. நா. வளர்ச்சித் திட்ட ஆற்றல்" எனப்படும் ஆய்வை (விற்பனைப் பகுதி, ஐ. நா. நியூயார்க் அல்லது ஜெனிவா, தொகுதி I. 1.00 டாலர். தொகுதி II, 6.50 டாலர்) நடத்த முயற்சியெடுத்த ஐ. நா. வளர்ச்சித் திட்ட ஆட்சி அவை அதற்கென ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சர் ராபர்ட் ஜாக்சனை நியமித்தது. அவரது அறிக்கை ("வளர்ச்சியில் கூட்டாளிகள்" எனும்) பியர்சன் அறிக்கைக்குத் துணையாக இருந்தது. எனினும், பியர்சன் அறிக்கை வளர்ச்சிக்கான உதவி பற்றிப் பொதுவாக ஆய்ந்தது; ஜாக்சன் அறிக்கை, உலக, பொருளாதார, சமூக வளர்ச்சிக்குத் துணைசெய்ய ஐ. நா. திட்டம் வெற்றி பெறக்கூடிய ஆற்றல் பற்றி தனிப்பட்ட சிக்கல்களை ஆராய்ந்தது. அதன் பரிந்துரைகள் பொருளாதார, சமூக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள ஐ. நா. நிறுவனங்களையும் தனிச் செயல் நிறுவனங்களையும் ஒன்றாக்கி, இணைத்து சீர்படுத்தும் நீண்ட காலத் திட்டத்தின் முதல் படியாக கருதப்படுகின்றன. அவற்றை ஆயும் ஐ. நா. வளர்ச்சித் திட்ட ஆட்சி அவையின் பரிந்துரைகள் இவ்வாண்டின் பிற்பகுதியில் ஐ. நா. பொருளாதார, சமூக அவையின் முன் சமர்ப்பிக்கப்படும்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துப் பார்க்கும்போது—நாம் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொள்ள இடம் தரவில்லை. மன நிறைவு அடைவதற்கோ ஒன்றுமே இல்லை.

மொத்த முன்னேற்றம் பெரிதாக இருந்தாலுங்கூட மக்களின் வறுமை மிகமிகக் கொஞ்சமே குறைந்துள்ளது. இம்மக்கள் உலக மக்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்கினர் வளரும் நாடுகளில் பெரும்பாலானவற்றில், தொழில் புரட்சிக்கு முன் ஐரோப்பாவில் இருந்த வாழ்க்கைத் தரமே இன்று இருக்கிறது. இவைகளில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் ஆண்டுக்கு 100 டாலருக்கும் குறைந்த வருமானத்தை வைத்தே வாழ வேண்டியிருக்கிறது.

இந்நாடுகளில் பெரும்பாலானவற்றில் மிகவும் பெரியனவும் மிகவும் தாழ்மையானவையும் உள்பட— வளர்ச்சி சராசரி அளவிற்கும், குறைந்து விட்டது. மக்கள் தொகை வெகு வேகமாகக் கூடி வருவதால் மக்களின் சராசரி வருமானம் வருமானமே இல்லை என்று கூறும் அளவிற்குச் சொற்பமாயிருக்கிறது. மக்கள் அதிக காலம் வாழ்கிறார்கள்; ஆனால் அவர்கள் நிலையில் முன்னேற்றமில்லை.

அதிகமான குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்கிறார்கள். ஆனால் அவர்கள் பெறும் கல்வி அவர்களுடைய சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் பொருத்தமற்றதாய் இருக்கிறது. நகரில் வந்து குடியேறும் மக்கள், வேலையில்லாதார் ஆகியோருடைய சிக்கல்கள் ஏராளம். விவசாயத்தில் ஏற்படடுள்ள ''பசுமைப் புரட்சி'' உற்சாகம் தருகிறது. ஆனாலும் பழைய சிக்கல்கள் தீர்ந்த அளவிற்குப் புதுச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

நாம் எதிர்நோக்கும் சிக்கல்களில் ஒரு சிலவற்றையே இங்குக் குறிப்பிட்டுள்ளேன். ஆயினும் 1950க்கு முன் கொள்கையை வகுத்தவர்களுக்கு இல்லாத ஒரு அனுகூலம் நமக்கு இருக்கிறது. ''வளர்ச்சித் திட்டங்கள் பலன் அளிக்கும். மனமும் உழைப்பும் இருக்கும் இடத்தில்—அந்த இடத்தில் மட்டுந்தான்—வளர்ச்சியை ஏற்படுத்த முடியும்'' என்பதை நாம் அறிவோம். ஆனால் இது அவர்களுக்குத் தெரியாது. 1970க்குப் பின் வளர்ச்சி சம்பந்தமாக ஏற்படும் சிக்கல்களை எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய விஞ்ஞான பூர்வமான நல்ல முறையில் அணுகுவதற்கு இந்த அறிவை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை நாம் இப்போது யோசித்துப் பார்க்க வேண்டும்.

தமிழில்: அ. இராமசாமி

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏழ்மையிலுள்ள நாடுகளின் தலைவிதிக்கு அக்கறை காட்டும் வகையில் தங்களது கருத்தை வெளிப்படுத்தும் உதவியாளர்களின் உதவித் திட்டங்களிலெல்லாம், மேலே சொன்ன புதிய உணர்வில் (அனைத்துமாக இல்லையென்றாலும்) சிலவேனும் பிரதிபலித்துக் காட்டப்பட்டுள்ளது. திறமைக் குறைவுகளைச் சரிசெய்வதற்கும்; அதிக அளவில் சேமிப்பு மற்றும் முதலீட்டைச் சாத்தியமாக்குவதற்கும்; சமூகத் தொண்டுகளை இன்னும் முன்னேற்றுவதற்கும் இன்னும் வளர்ச்சி விகிதத்தைத் தூண்டி விடுவதற்குமாக, வெளிநாட்டு உதவி என்பது அநேக நாடுகளுக்கு மிக முக்கியமான அம்சமாக ஆகியிருக்கின்றது

ஆனால், உதவியானது, குறைகூறலுக்குட்பட்ட இரண்டாவது நோக்கத்தையும் நிறைவேற்றியிருக்கிறது. அதாவது, சரியான வழிகளில் இவ்வுதவி வழங்கப்பட்டபோது நாணய மதிப்பைக் குறைத்தல், இறக்குமதிகளின் மீதான தடைகளைத் தளர்த்தல் போன்ற தைரியமான கொள்கை மாற்றங்களை மேற் கொள்வதற்குத் தேவையான இணக்கத் தன்மையை, குறைந்த வருவாயுள்ள நாடுகளுக்கு, அவ்வுதவியானது தந்துள்ளது.

அந்நியச் செலாவணி தலையாய கட்டுப்பாடாக இல்லாத ஆப்பிரிக்காவில், உதவியின் அளவும் சரி, உதவியின் உறவும் சரி, பொருளாதாரக் கொள்கையை வகுப்பதில், முக்கியமான பங்கை ஏற்கின்றன.

ஆயினும், உள்ளூர் முயற்சிகள் மற்றும் கொள்கைகளின் முக்கியத்துவங் குறித்து, கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகின்ற இடங்களில் கூட, உதவியாளருக்கும், உதவி பெறுபவருக்குமிடையே நடந்திருக்கின்ற விவாதங்கள், அவ்வளவு திருப்திகரமானவையாக இல்லைதான். சில நேரங்களில், பிரச்னையைக் கூட்டாக அமர்ந்து அலசியதன் விளைவாக, பயன்மிக்க கூட்டு நடவடிக்கை மேற்கொள்ள முடிந்திருக்கின்றது; ஆனால், பெரும்பாலான இடங்களில் வளர்ச்சிக்கு முனைவது என்கிற உணர்வே காணோம். அது ஒரு பக்கத்தில் இல்லாமல் இருக்கலாம்; அல்லது இரண்டு பக்கத்தாரிடையுமே இல்லாமலும் போகிறது; அல்லது தவறுதலாகவும் எடுத்துச் சொல்லப்பட்டு விடுகிறது.

தங்கள் சொந்த அக்கறைகளில் பிறர் தலையீட்டை விரும்பாத, உதவி பெறுபவரின் பிரச்னையிலிருந்து, முக்கியமாகவே போட்டியில் இருக்கின்ற துறைகளுக்கு உதவி செய்யவோ அல்லது, புதிய பொருள்களுக்குத் தங்களது சந்தைகளைத் திறந்து விடவோ மறுக்கின்ற உதவியாளரது பிரச்னைகள் வரை, சிக்கல்கள் பல வேறு பட்டவையாக இருக்கின்றன. எப்போதுமே நடப்பது என்னவென்றால், ஒரு செயலின் முக்கியத்துவம் குறித்தோ அல்லது அரசியல் உணர்ச்சி பயங் குறித்தோ அல்லது, எந்த வேகத்துடன் அதை நிறைவேற்ற முடியும் என்பது குறித்தோ, உதவி அளிப்போருக்கும் சரி உதவி பெறுபவருக்கும் சரி கருத்து வேறுபாடு எழவே செய்கிறது.

(அணிமை ஆண்டுகளில், இவ்வுதவி பெருகத் தவறியதன் காரணமாக, அந்நியச் செலாவணி இல்லாததே வளர்ச்சியின் மீது முதலாவது கட்டுப்பாடாக வந்து நிற்கின்ற நாடுகளில், குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றத்திற்குப் போதுமான ஆதரவு திரட்டுவதற்கு மிகவும் இடர்ப்பாடாகியிருக்கிறது என்பது உண்மை தான்).

இறுதியாக உதவியாளரைப் பொறுத்தும் சரி, உதவி அளிப்போரைப் பொறுத்துஞ் சரி, அரசியல் ரீதியான வரிசைக் கிரம வைப்புடன் முக்கியத்துவம் தருவது என்பது அநேகமாக நிச்சயமற்றதே; அத்துடன் அவசியம் மாறுதலுக்குட்பட்டதுமாகும். உதவிபெறும் நாடுகள், பல்வேறு உதவியாளர் நாடுகளிடமிருந்து, முரண்பட்டகொள்கை ஆலோசனைகளைப் பெற்றிருக்கின்றனர்; அல்லது குறிப்பிட்ட உதவி வழங்கும் அமைப்பிடமிருந்து, பல்வேறு ஆண்டுகளில் வேறு வேறு விதமான ஆலோசனைகளைப் பெற்றிருக்கின்றனர். அவர்கள், எதற்கு முதலிடம் தருவது என்பதெல்லாம், சாதாரணமான அரசியல் வலியுறுத்தல்களைப் பொறுத்ததுதான், எனவே அவ் வலியுறுத்தல்களின் மீது, ஒரு முடிவுக்கு வருவது என்பதோ, செயல்படுவது என்பதோ, இடர்ப்பாடானதாகும்.

இவ்வாறு, வளர்ச்சிக்கான கொள்கைகளின் மீதும் அவற்றிற்குத் தேவையான உறுதுணையின் மீதும், வெற்றிகரமான வகையில் கவனஞ் செலுத்தப்பட்டிருப்பினும், கூட்டாக அலசிப் பார்பதற்குத் தேவையான இயக்கமானது (குறிப்பிட்ட சில இடங்களில் நீங்கலாக) இன்னமும் போதுமானதாக இல்லை

தமிழில்: தெய்வசிகாமணி

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரியாக நிர்வகிக்கப்படுவதில்லை. அவற்றிற்கு போதுமான நிதி வசதியும் இல்லை. இதுவும் ஒரு வகையில் சிறு குடும்பக் கருத்துக்கு எதிராகச் செயல்படுகிறது; பெரும் குடும்பம் அமைக்கத் தூண்டுவதுபோல் உள்ளது.

மேற்கூறிய முக்கியமான கருத்துக்களை சமுதாயக் கொள்கை வகுக்கும் போது வளரும் நாடுகள் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் அப்பிரச்னைகளைத் தீர்க்க எல்லாவிதமான உதவியும் அளிக்கப்பட வேண்டும். பொருளாதார சமூக மாறுதல்களை நிறைவு படுத்தும் இன்றைய சமுதாயத்தில் பாதுகாப்பிற்கு உள்ள ஒரே அமைப்பான குடும்ப நலத்தைப் பின்னுக்குத் தள்ளுவது போன்ற தவறான கொள்கை வேறு எதுவும் இருக்க முடியாது. இயன்ற அளவு எல்லா உதவி நிறுவனங்களும் தனியாகவும் கூட்டாகவும், பிறப்பைக் கட்டுப்படுத்தும் சமுதாயத் திட்டங்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து உறுதுணையாகத் திகழ வேண்டும்.

இத்துறையில் வளரும் நாடுகளுக்கு மேன்மேலும் சிறந்த கருத்தடைக் கருவிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது. உண்மையில் இப்போது வளங் குன்றிய நாடுகளுக்குத் தேவைப்படுவதெல்லாம், மிக்கப் பயன்தரும், ஏற்றுக் கொள்ளத் தக்க கருத்தடைச் சாதனமேயாகும். லூப்பும், கருத்தடை மாத்திரைகளும் பெரிய முன்னேற்றத்தின் சின்னங்களே என்றாலும் அவை எல்லோரும் எளிதில் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இல்லை.

1960ஆம் ஆண்டு முதல், பிறப்பைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மனித உயிரியல் ஆராய்ச்சி, புதிய

ஊக்கத்துடன் செய்யப்பட்டு வருகிறது. அதிலும், குறிப்பாகக் கருத்தடை மாத்திரைகளால் பாதிக்கப்படும் பெண் ஹார்மோன்களைப் பற்றி ஆராய்ச்சி தீவிரமாக நடந்து வருகிறது. எதிர்காலத்தில் மிகப் பயன்தரத்தக்க பிறப்புக் கட்டுப்பாடு முறை, இன உற்பத்தி முறைகளின் ஆராய்ச்சியில் இன்னும் கண்டுப்பிடிக்கப்படாத பலவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்துறையில் தற்போது கொள்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் பஞ்சமில்லை. நிதி வசதியின்மை, ஒருங்கிணைப்பு இன்மை, ஆராய்ச்சியாளர்களுக்கிடையே நிலையான தொடர்பின்மை ஆகியவற்றாலேயே இத்துறை இன்னமும் முன்னேறாமல் இருக்கிறது. மனித இனப் பெருக்கத்தைப் பற்றிய பன்னாட்டு ஆராய்ச்சி இன்னும் ஒரு சில ஆண்டுகளிலேயே பயன் தரலாம். ஆனால் அதற்கு தற்போது உலகிலுள்ள நிறுவனங்களையும், ஆராய்ச்சிக் கூடங்களையும், பிறப்புக் கட்டுப்பாடு ஆராய்ச்சிக்குத் தலையாய இடம் அளிக்குமாறு தூண்ட வேண்டும். உலக சுகாதார கழகம் இப்பணியை ஏற்றுக் கொள்வது பொருத்தமே. ஆனால், நீண்ட காலமாக அது குடும்பக் கட்டுப்பாடு துறையில் குறுகிய நோக்குடன் தனது பொதுச் சுகாதாரப் பணியுடன் இணைத்து தனது குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை செயலாக்கும் நிர்பந்தம் இருந்து வந்தது. மேலும் மனித இனப் பெருக்க ஆராய்ச்சிக்குக் கணிசமான நிதி உதவியும் தேவைப்படுகிறது. எனவே உலக வங்கி உலக சுகாதார சங்கத்துடன் கலந்து பேசி, மனித இனப் பெருக்கம், மற்றும் பிறப்புக் கட்டுப்பாடு துறைகளில் நடைபெறும் ஆராய்ச்சிக்குப் பொருளுதவி அளித்து, ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் பன்னாட்டுத் திட்டமொன்றைப் பரந்த அளவில் தீட்டி உடனடியாக செயல் படுத்த வேண்டுமென்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

தமிழில்: 'அறிவியல் நம்பி'

(32ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதிப் பொருள்களுக்கும் முக்கியமாகிறது. உணவு தானியத்தை பெருக்குவதோடன்றி அதன் தரத்தையும் உயர்த்த வேண்டியுள்ளது.

நிலச்சீர்திருத்தம், சிறுசிறு நிலவுடைமைகளை ஒருங்கு திரட்டுவதும் வளரும் நாடுகள் பலவற்றுக்கும் வேண்டுவன. அப்பொழுதுதான், உற்பத்தியைப் பெருக்கவும், நுட்பத் துறையில் முன்னேற்ற விரைவு காணுவதோடு நாட்டுப்புற வேலை வாய்ப்பளிக்கவும் இயலும். நிலச்சீர்திருத்தம் என்பது சிறிய காரியமன்று என்பதும் காலங்கடந்தே கைகூடும் என்பதும் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

நிலவுடைமை அமைப்பு மாற்றும் திட்டத்தால் விளையும் குறுகிய காலச் சிக்கல்களையும் முரண்பாடுகளையும், தணிப்பதற்கான சாதனங்கள், பெரும்பான்மையான அரசுகளிடம் இப்பொழுது உள்ளன.

தமிழில்: மா. சண்முக சுப்பிரமணியம்

யுனெஸ்கோ செய்தியறை

உலக வானிலை ஆராய்ச்சி

வானிலை பற்றி இதுவரை சேகரிக்காத விரிவான தகவல்களைத் தொகுப்பதில், வானிலை ஆராய்ச்சியாளர்களுக்கு மாலுமிகள், விமானிகள், இதற்காக வலிய உதவும் பார்வையாளர்கள் முதலியோர் அண்மையில் உதவி புரிந்துள்ளனர். இத்தகவல்கள் அனைத்துலக வானிலை ஆராய்ச்சித் திட்டத்தின் ஆரம்ப ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தை உலக வானிலைக் கழகமும், உலக விஞ்ஞானக் கழகங்களின் கூட்டுச் சபையும் சேர்ந்து நடத்துகின்றன. வாயு மண்டலத்தின் அமைப்பையும், இயக்கத்தையும்பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளும் நோக்கத்தோடு 1970இன் பிற்பகுதியில் இந்த ஆராய்ச்சிகள் நடக்க இருக்கின்றன.

நீரியல் ஆராய்ச்சியில் பத்தாண்டுத் திட்டம்

அனைத்துலகப் பத்தாண்டு நீரியல் ஆராய்ச்சித் திட்டம் யுனெஸ்கோ ஆதரவின் கீழ் 1964லிருந்து நடந்து வருகிறது. அண்மையில் எண்பதுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்த நிபுணர்கள் பாரிஸ் யுனெஸ்கோ தலைமையகத்தில் கூடி, சென்ற ஐந்தாண்டுகளில் இத்திட்டம் அடைந்துள்ள் முன்னேற்றங்களை மதிப்பிட்டனர். 1970–74இல் ஆற்ற வேண்டிய திட்டங்கள் பற்றியும், நீரியல் ஆராய்ச்சியில் உலக ஒத்துழைப்பை மேலும் பெறுவது பற்றியும் ஆராய்ந்தனர். மனிதன் சூழ்நிலையை மாற்றியமைப்பதால் தோன்றும் நீரியல் பிரச்னைகளுக்கு தனி முக்கியத்துவம் தரப்படும். உப்பு நீரை நல்ல நீராக்குவதன் விளைவுகள் பற்றியும், வளர்ந்து வரும் பிரச்னையாகிய நீர்நிலைகள் அசுத்தமாக்கப்பட்டு வருதல் பற்றியும் கவனிக்கப்படும். நெருங்க முடியாத பரந்த நிலப்பகுதிகளின் நீரியல் பற்றிய தகவல்களைத் தொலைவிலிருந்தே (விமானம், செயற்கைக் கோள் மூலம்) தெரிவிக்கும் கருவிகள் அதிகமாகப் பயன்படுத்தப்படும்.

இருதய நோயின் காரணங்கள் பற்றிய விசாரணை

அதிக இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், உடலின் அதிக எடை, உடலுழைப்பில்லாத தொழில் முதலியவை, செல்வம் செறிந்த நாடுகளில் காணப்படும் இருதய நோய்களுக்குக் காரணங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் வளரும் நாடுகளில் இந்தக் காரணங்கள் இருதய நோயை உண்டாக்கவில்லை என்று உலக சுகாதாரக் கழக வெளியீடு கூறுகிறது. இதன் காரணம் ஆப்பிரிக்க, ஆசிய உணவுப் பழக்கங்களும் வாழ்க்கை முறையிலும் இருக்கலாம் என்று அந்நாடுகளில் நடக்கும் ஆராச்சிகள் காட்டுகின்றன. எனவே பல நாட்டு உணவுப் பழக்கங்கள் அலசி ஆராயப்படுகின்றன. உதாரணமாக சிங்கப்பூரில் மலேசியர், சீனர், இந்தியர் முதலிய மூன்று இனத்தவர் இருக்கின்றனர். உணவுப் பழக்கங்களில் மலேசியர் சீனரிடமிருந்து மாறுபட்டுள்ள இந்தியர்கள் குறிப்பாக இருதய நோய்க்கு ஆளாகின்றனர். மலேசியர்களும் சீனர்களும் எந்த உணவை உண்பதால், அல்லது உண்ணாமல் விட்டதால் இருதய நோய் வரவில்லை என்னும் உண்மை ஆராய்ச்சியின் மூலம் தெரியலாம்.

வியட்நாமின் பரம்பரை இசை

யுனெஸ்கோ சேகரித்துள்ள கீழ் நாடுகளின் இசைத் தொகுப்பில், வியட்நாம் இசையின் முதல் நெடு நேர ஒலித்தட்டில், மத்திய வியட்நாமைச் சேர்ந்த ஹியூவின் இசை இடம் பெற்றுள்ளது. அதில் அரசவை நடனங்கள், பரம்பரை அரங்கப் பாடல்கள், புத்த கானங்கள், புலமைப் பாடல்கள் முதலியவை அடங்கியுள்ளன. யுனெஸ்கோ சேகரித்துள்ள 21 ஒலித்தட்டுகளில் ஆப்கானிஸ்தானம், கம்போடியா, இந்தியா, ஈரான், ஜப்பான், திபேத், டுனீஷியா, துருக்கி முதலிய நாடுகளின் இசைகளைக் கேட்கலாம்.

செய்திக் கதிர்கள்

■ ஆண்டுதோறும் உலக உணவு உற்பத்தியில் ஐம்பது சதவீதம் சேதமாக்கப்படுகிறது என்று உணவு விவசாயக் கழகம் கூறுகிறது. வீணாக்கும் உணவைப் பத்து சதவீதம் குறைத்தாலும் உலகில் ஒவ்வொருவருக்கும் சரியான ஊட்டமளிக்கப் போதிய புரதமும் உணவும் கிடைக்கும்.

■ சென்ற பத்தாண்டுகளில் இந்திய செய்தித்தாள்களின் விற்பனை இரட்டித்துள்ளது. அறுநூறுக்கு மேற்பட்ட தினத்தாள்கள் வெளியிடப்படுகின்றன. அதில் 40 சதவீதம் டில்லியிலும், மற்றும் ஆறு பெரிய நகரங்களிலும் வெளியாகின்றன.

■ சமுத்திரங்களிலிருந்து 180 கோடி டன்கள் மீன்வளம் பெற முடியும். அதில் தற்போது உலக முழுதும் 5 சதவிகிதம்தான் பிடிக்கப்படுகிறது என்று ஜப்பான் கடலாராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

Edited and published by T. P. Meenakshisundaran for the Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10 and



400 பக்கங்கள்

அண்மை வெளியீடு

பியர்சன் அறிக்கை

பன்னாட்டு வளர்ச்சிக் குழுவின் அறிக்கை

'இஃது 20ஆம் நூற்றாண்டின் முக்கிய ஆவணங்களுள் ஒன்றாக இருக்குமென நம்புகிறேன்.'

—பிரிட்டிஷ் பிரதமர் ஹெரால்டு வில்சன்

- 20 ஆண்டு வளர்ச்சித் திட்டங்களின் விளைவுகளை வெளிப்படையாக முற்றிலும் ஆய்ந்து மதிப்பிடுகிறது.
- வருங்கால வளர்ச்சி பற்றிய சிக்கல்களையும் கொள்கைகளையும் ஆற்றல் வளங்களையும் ஆய்கிறது.
- பன்னாட்டுக் கூட்டுறவுக்குரிய புதிய அடிப்படையை வகுத்து, உதவி வழங்கும், உதவி பெறும் நாடுகளின் பொறுப்பை விளக்கி, வருங்கால வளர்ச்சிக்குரிய ஒரு புதிய உலகத் திட்டத்தைக் கூறுகிறது.

பால்மால் அச்சகம், இலண்டன்.
பிரேகர் பதிப்பாளர், நியூயார்க், வாஷிங்டன், இலண்டன்.
விற்பனையாளரிடமிருந்து வாங்குங்கள்

யுனெஸ்கோவிற்குப் பணம் அனுப்ப வேண்டாம்

(Form IV, See Rule 8)

1.	*Place of Publication*	**Madras**
2.	*Periodicity of the Publication*	**Unesco Courier-Tamil Monthly**
3.	*Printer's Name*	**B. Venugopal Reddy (Prasad Process P. Ltd.)**
	Nationality	**Indian**
	Address	**Chandamama Buildings Vadapalani, Madras-26**
4.	*Publisher's Name* *Address*	**Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10**
5.	*Editor's Name*	**T. P. Meenakshisundaran**
	Nationality	**Indian**
	Address	**Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10**
6.	*Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital*	**Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) N. D. Sundaravadivelu
Chairman,
Publisher,
Southern Languages Book Trust,
Madras-10.

REGD. NO. M 8276



வளர்ச்சியில் கூட்டாளிகள்

வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும் வளர்ச்சியுறும் நாடுகளுக்குமிடையே பெருகிவரும் பிளவு இன்றைய முக்கிய பிரச்னையாகிவிட்டது. "வளர்ச்சியில் கூட்டாளிகள்" எனும் பியர்சன் அறிக்கை வளர்ச்சியையும் உதவியையும் ஒரு புதிய கோணத்தில் காண்கிறது. அதை ஒரு நாட்டின் அல்லது நாடுகளின் ஒரு தொகுதியின் முயற்சி எனப் பாராமல், ஏழை நாடுகளும் செல்வ நாடுகளும், தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளும் வளர்ச்சியுறும் நாடுகளும் சேர்ந்து பங்கு பெறும் உலக முயற்சியாகக் கருதுகிறது. படம் சூடானில் நடைபெறும் வளர்ச்சித் திட்டத்தைக் காட்டுகிறது இதற்கு உலக வங்கியும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகமும் 3-25 கோடி டாலர் கடன் வழங்கியுள்ளன. Photo United Nations